# ஆத்மஜோதி



குருவாய் வருவாய்
அருள்வாய் குகனே!

# 1983 ஆடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே
—சுத்தானந்தர்

ஆசிரியர்: நா. முத்தையா

ஜோதி: 35 — ஆடி — (17-7-83) — சுடர்: - 9


## பொருளடக்கம்


| | |
|---|---|
| கதிரைமணிமாலை | —385 |
| காணக் கண்கோடி வேண்டும் | —386 |
| கதிர்காம முருகன் | —387 |
| ஆத்மசிந்தனை | —392 |
| தீயவழக்கங்களைக் கட்டுப்படுத்தல் | —386 |
| பட்டினத்துப் பிள்ளையார் | —402 |
| சுவாமி ராமதாஸ் அருளுரை | —404 |
| சர்வாங்காசனம் | —405 |
| தெய்வ வளம் நிறைந்த தம்பலகாமம் கோணேசர் ஆலயத்தில்...... | —407 |
| மனிதரின் உணவு மாமிசமா மரக்கறியா? | —412 |
| பக்தி | —416 |
| தர்மசாஸ்திரம் | —423 |
| அன்னையின் வடிவக்காட்சி | —427 |
| வேற்று நாடுகளில் விநாயகப்பெருமான் | —430 |



## ஆத்மஜோதி சந்தா

இலங்கை வருடச் சந்தா— 25 ரூபா
,, ஆயுள் சந்தா— 500 ரூபா
இந்தியா வருடச் சந்தா— 25 ரூபா (இந்திய ரூபாய்)
,, ஆயுள் சந்தா— 500 ரூபா ( ,, ,, )
சிங்கப்பூர்-மலேசியா-இந்துனேசியா
வருடச் சந்தா— 10 வெள்ளி
ஆயுள் சந்தா— 200 வெள்ளி

ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி — ஸ்ரீ லங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிரைமணிமாலை - பரமஹம்சதாசன்

ஊனாய், உயிராய், உலகமெலாம்
ஒளிரும் கருணைப் பேரிறைவா!
கோனாய்த் தமிழர் குலங்காக்கும்
குமரா, பரமகுரு தேவா!
வானோர் பணியும் படைத் தலைவா!
வள்ளி படரும் மலைக்கிழவா!
தேனார் அமுதப் புனல் தவழும்
செல்வக் கதிரைத் திருமுருகா!

இறைஞ்சித் தொழுவார்க் கிரங்கி, மன
விருளைக் கடிந்துள் ளொளி பெருக்க
வருஞ்சித் திரவேல் விழிச்சுடரே!
வளர்செந் தினைத்தேன் வள்ளி மகிழ்
குறிஞ்சிக் கிழவா! அசுர குணக்
குலத்தை யழித்துன் குரைகழலை
இறைஞ்சிப் பெருவாழ் வுறவருளாய்
எந்தாய், கதிரை இறையவனே!

அரும்பு விழிகள் புனல் சொரிய
அங்கம் புளகித் தன்பரெலாம்
கரும்பே தெவிட்டாக் கனியே, எம்
கண்ணே! என்றுன் சந்நிதியில்
துரும்பாய் உருக, எனைமட்டும்
சோம்பிக் கிடக்கும் கருங்கல்லாய்
இரும்பாய் வைத்தல் முறையாமோ?
இதுவோ கருணை? எம்மானே!

அன்புள் ளுருகி, அடியரெலாம்
அரோக ராவென் றார்ப்பரித்து,
இன்பக் கடலில் திளைத்தாடும்
இயல்பைக் கண்டும், எளியமனம்
பெண்பால், பொருள்பால், காட்சியின்பால்,
பெயர்த்தும் செல்லா தொழிந்திலனே;
என்பாற் சற்றும் உனக்கிரக்கம்
இலையோ? கதிரை எந்தாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணக் கண்கோடி வேண்டும்

— கடையநல்லூர் மஜீத் —

ராகம்-காம்போதி தாளம்-ஆதி

பல்லவி

காணக் கண்கோடி வேண்டும்
கந்தன் என்பவனைக் (காண)

அனுபல்லவி

பூரண சந்திரனைப் பழிக்கும் ஆறுமுகத்தில்
புன்னகை தவழ்ந்திடும் அய்யன் முருகனைக் (காண)

சரணம்

கோரும் வரம் ஈந்து குறையகற்றும் ஓர்கரம்
யாரும் வருக என்று அழைத்திடும் ஓர்கரம்
மாருத ரோகத்தை மாற்றிவைக்கும் ஓர்கரம்
தேவர் குறைகளைத் தீர்ப்பேன் என்ற ஓர்கரம்
சூரபத்மனைத் துணித்ததோர் கரம்
தெய்வயானையை அணைத்த தோர்கரம்
பக்தர்கட்கபய மளிக்கு மோர்கரம்
சக்திவேல் தனைத்தரித்த கரங்களைக் (காண)

வேடமங்கையை காணத்தேடி வனத்தில் சென்று
மோகங்கொண்டு வளையல் விற்றதிருக்கரம்
தேனும் தினைமாவும் தேவிதர உண்டு
சுனையில்நீர் உண்டிட சென்ற திருக்கரம்
கானவள்ளியைக் கலங்கச் செய்திட
யானைமுகத்தனை அழைத்ததோர்கரம்
மான் மகள்தனை மணந்த தோர்கரம்
மாதா ராஜேஸ்வரி மகிழும் பாலனைக் (காண)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம முருகன்

— ஆசிரியர் —

இலங்கையிலுள்ள ஒரு மலை முகட்டில், நடுப்பகல் வேளை யில் நின்று இந்து மாக்கடலுள் நோக்கினால், கடலின் அடிப் பகுதியில் பொற்கலசமொன்று காணப்படும் என்றும், அஃது இராமாயண காலத்தில் இலங்கையின் மன்னனாயிருந்த இராவ ணேஸ்வரனின் அரண்மனைக் கலசம் என்றும் பலர் கூறக் கேள்வி. இக்கூற்று உண்மையாயினும் பொய்யாயினும் இந்து மாக்கடலுள் ஒரு பரந்த நிலப்பகுதி அழுந்தியுள்ளது என் பதை இது குறிக்கும் என்று கொள்வதனால் எய்தும் இழுக் கொன்றுமில்லை.

மேலே குறிப்பிட்ட மலை முகடு கதிரமலை முகடாகும். சூர பத்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசு செலுத்திய தலைநகரம் மகேந்திரபுரியாகும். இம் மகேந்திரபுரி இருந்த இடம் இந்து சமுத்திரமாகும். வீரவாகுதேவர் சூரபத்மாவிடம் தூது சென்றபோது கந்தமாதன பர்வதத்திலிருந்து புறப் பட்டு ஆகாயமார்க்கமாகத் தென்திசை நோக்கிச் சென்றுள் ளார். அவர் முதலிற் சந்தித்த இடம் இலங்கையாகும். இலங் கையிலிருந்த அவுணர்கள் வீரவாகுதேவரை எதிர்க்க அவர் தன்னை எதிர்த்த அவுணர்களை எல்லாம் சங்காரம் செய்து இலங்கையிலிருந்து ஆயிரம் யோசனை தூரத்திலுள்ள மகேந் திரபுரியை நோக்கிச் சென்றார் என்று கந்தபுராணம் கூறுகின் றது.

கதிர்காமத்திற்குப் பக்கத்திலே உள்ள கிரிவிகாரை கட் டப்படுவதற்கு முன்பு அந்த இடம் சூரன் கோட்டை என்று அழைக்கப்பட்டது. இலங்கை சூரனுடைய ஆட்சிக்குட்பட்டி ருந்தது என்பதற்கு இதுவும் ஒரு அத்தாட்சியாகும்.

அழியா வரந்தரும் ஆறுமுகப் பெருமானின் அற்புதத் திருவிளையாடல்கள் இன்றும் நடைபெறும் திவ்விய க்ஷேத்தி ரம் கதிர்காமம். அது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன் றின் மகிமையால் இணையற்ற சிறப்புடைத்து. நம்மவர்கள் சிதம்பரத்தையும் காசியையும் கயிலையையும் நினைப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று தென்னிந்திய பக்தர்கள் கதிர்காம முருகனை அடிக்கடி நினைப்பதுண்டு. அவர்கள் இந்தியா முழுவதும் யாத்திரை செய்தாலும் கதிர்காம யாத்திரையின் பின்தான் அவர்களது யாத்திரை பூர்த்தியாகின்றது. தமிழகத்தவரையும் எங்களவரையும் அத்தியாத்மத் தொடர்பில் பிணைத்துநிற்பது கதிர்காமம் ஆகும்.

---

இந்து, பௌத்தம், இஸ்லாம் ஆகிய மூவரையும் ஒன்றுபடுத்தும் இடம் கதிர்காமம். முருகப்பெருமான் அருவமாய் நின்று அருள் விளையாடல் செய்யும் இடம் கதிர்காமம். இந்தியாவில் காந்தியின் ஹரிஜனப் போராட்டத்திற்குப் பின்பே இந்துக்கோயில்கள் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பெற்று சமரச வழிபாடு ஏற்பட்டது. கதிர்காமத்திலோ சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே சமரச வழிபாடே நடைபெற்று வந்துள்ளது. அந்தக் காலத்திலே அரசனுஞ் சாமிதான்; ஆண்டியுஞ் சாமிதான். இன்று முருகப்பெருமானுக்கு வேட்டுவப் பெண்களுடைய பூஜைதான் முதலில் இடம் பெறுகிறது.

தேவநண்பிய தீசன் காலத்திலே அதாவது கி. மு. 307 ஆம் ஆண்டில் தான் இந்த நாட்டிற்கு முதன் முதலாக புத்த மதம் காலடி எடுத்துவைத்தது. இந்த நாட்டிற்குப் புத்தமதம் வருவதற்கு முன்பே இந்நாட்டில் உள்ளவர்கள் எல்லாரும் இந்துக்களாகவே இருந்தார்கள். இலங்கையின் முதலாவது சிங்கள அரசனுகிய விஜயன் கதிர்காமத்தைப் புனருத்தாரணம் செய்தான் என்று மகாவம்சம் கூறுகின்றது.

மிகப் புராதன காலத்தில் அகத்தியரிலங்கை, புலத்தியரிலங்கை, குபேரனிலங்கை, இராவணனிலங்கை, விபீஷணனிலங்கை என்ற பெயர்களால் அழைக்கப்பட்டும் ஆட்சிசெய்யப்பட்டும் வந்துள்ளது. கதிர்காமம் என்பது கடவுள் தன்மையுடைய ஒளியும் அன்பும் நிறைந்த இடம் என்று பொருள்படும். கதிர்காமம் சமயவரலாற்றுச் சிறப்புமிக்கது. சீதையைத்தேடி வந்த அநுமன் கதிர்காமப் பெருமானை வணங்கிச் சென்றுன் என்பர். தேவநண்பிய தீசனுடைய ஆட்சிக் காலத்தில் அசோகமன்னரின் மகள் சங்கமித்திரை அநுராதபுரத்திற்குக் கொண்டு வந்த அரசமரத்தின் கிளையொன்றைக் கதிர்காமப் பிரபு வாங்கிவந்து இங்குள்ள கோயிலில் நாட்டியதாகக் கூறப்பட்டுள்ளது. கி.மு. 300இல் மகாநாகன் என்னும் அரசர் கதிர்காமக் கோயிலுக்குப் பக்கத்தில் கிரிவிகாரை என்ற பௌத்த மடத்தைக் கட்டினுர். இப்பொழுதுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலாவது 17ஆம்நூற்றுண்டின் முற்பகுதியிலாவது முதலாம் அல்லது இரண்டாம் இராசசிங்கனுல் கட்டப்பட்டிருக்கவேண்டும் என்று வரலாற்றுசிரியர்கள் கருதுகின்றனர். ஆறு குழந்தைகளாகச் சரவணப் பொய்கையிலே தவழ்ந்து முருகனை உமாதேவியார் எடுத்தபோது ஆறுதிருமுகங்களும் ஒரு திருமேனியுங் கொண்டு அறுமுகன் ஆனுன். அதனுல் கந்தன் என்னும் பெயரைப் பெற்ருன். கந்தன் என்ற சொல்லுக்கு ஒன்ருனவன் கட்டுப்பட்டவன் என்பது பொருள். பற்றுக்கோடானவன் என்ற பொருளும் உண்டு. எப்பொழுதும் இளமைத்திருக் கோலமே உடையவனுதலின் முருகன், குமரன், சேய், பால சுப்பிரமணியன் என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்ருன். அன்பர்களுடைய இதயக்குகையிலே விட்டு நீங்காமலிருத்தலினுல் குகன் என்ற திருநாமத்தையும் உடையவன்.

சரவணப்பொய்கையில் தவழ்ந்தானுகையால் சரவணபவன் என்றும் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டானுகையால் கார்த்திகேயன் என்றும் விசாக நட்சத்திரத்திற்குரியனுகையால் விசாகன் என்றும் பெயர்களைப் பெற்ருன். கிரௌஞ்ச மலையையும் சூரனது உடலையும் பிளந்ததாகிய இவரது வேலாயுதத்தின் பெருமை கற்பனைக்கு எட்டாதது. இதுபற்றியே கதிர்வேல், சக்திவேல், வெற்றிவேல், வடிவேல், தங்கவேல், சித்திரவேல், குமாரவேல் என்று பலவகைச் சிறப்புகளால் அழைப்பர்.

போரிற் புறங்கொடுத்த சூரனை சேவலும் மயிலுமாக்கி சேவலைத் தனக்குக் கொடியாகவும் மயிலை வாகனமாகவும் கொண்டாராதலினுல் சேவற்கொடியோன் என்றும் மயில்வாகனன் என்றும் அழைக்கப்படுகின்ருர். கடப்பமாலை அணிந்தவரானபடியினுல் கடம்பன் என்ற பெயரைப் பெறுகின்ருர்.

சிங்கள மக்கள் முருகனை 'கதறகமத்தெவியோ' என்றும் கதிர்காமத்தை 'கத்தறகம' என்றும் அழைப்பர். 'கத்துறு' என்பது, தோடங்காய்ப் பருமனுள்ள காய்களையுடைய ஓர் நச்சு மரத்தின் பெயராகும். 'கத்துறு' என்னும் பெயரையுடைய நச்சுமரங்கள் நிறைந்த இடமாதலின் 'கத்தறகம' எனப் பெயர் வந்ததென்பர்.

கதிர்காமத்தில் கப்புருளைமார்களே பூஜகர்களாகி வேண்டிய கோவிற்பணிகளை எல்லாம் செய்வர். அண்டமுகட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளாவிச் செவிடுபட ஒலிக்கும் 'வேல், வேல்' என்னும் ஆரவாரத்தொனி ஒரு புறமும், கருத்தை அறியாது கேட்டவாய் கேட்டு அரோ-ஹரா என ஒலிக்குந்தொனி மறுபுறமுமாக ஓர் நவீன முறைபற்றியே கதிர்காம உற்சவம் நடைபெறுகிறது. அகரம் உகரம் இரண்டும் சேர்ந்தே அரோஹரமானது. இந்த அரோகரம், ஓம் என்ற பிரணவ அட்சரத்தையே குறிக்கும். கதிர்காமத்தில் அரோகரா என்னும் வார்த்தைக்கு இருக்கும் வலிவு வேறு எந்த முருக தலத்திலும் நாம் காணமுடியாது. கதிர்காமத்தில் பக்தர்கள் எல்லோருமே உயர்வு தாழ்வு இன்றி யும் செயல்கள் எல்லாமே அரோகரா என்றுதான் அழைப்பார்கள்.

ஒருவர் அரோகரா என்று கூறினல் அவ்வொலிகேட்ட அத்தனை பேரும் அரோகரா என்று வாய்விட்டு ஒலிப்பர். பாதைக்கு அரோகரா என்ருல் அத்தனை பெருங்கூட்டத்தின் யத்தியிலும் வழி கிடைத்துவிடும். விபூதி நிரம்பிய சட்டிகளில் விளைகற்பூரத்தை எரித்து அச்சட்டிகளைப் பக்தர்கள் தலையிலே சுமந்துகொண்டு கூட்டங்கூட்டமாகப் பக்தி பரவசத்தோடு வருங்காட்சியைப் பார்த்த எவருக்கும் மயிர்க்கூச்செறியும்.

கதிர்காமத் தலத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் விபூதிமலை என்ற பெயருடன் ஒரு மலை உண்டு. அங்கு பெறப்படும் விபூதியே கதிர்காம விபூதியாகும். நிலத்திலிருந்து பெறப்படும் விபூதி கதிர்காமத்தைத்தவிர உலகின் வேறு எந்த இடத்திலும் நாம் காணமுடியாது.

''காசியிலிறக்க முத்தி கயிலையிற் பிறக்கமுத்தி
கேசமர் இல்லை தன்னில் திருநடங்காணமுத்தி''

என்றெல்லாம் கூறிய பெரியோர்கள் கங்காதீர்த்தத்திற்கும் மாணிக்க கங்காதீர்த்தத்திற்கும் முதன்மை கொடுத்துள்ளார்கள்.

''அத்தனிறைவன் அமலேசன் அமராலயத்தினருகுறுநீர்
சுத்த மசுத்த மாயினு நற்சுரர்கள் பரவுங் கங்கையென்றே
புத்தி புரிந்தங்கத் தடத்தில் புனலுட்படிவோர் யாரெனினும்
சுத்த சனனத் துறுபாவத் தனைத்துசிறந்து விளங்குவரே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவருடப் பிறப்பை ஒட்டிய மூன்று தினங்களும் ஆடி மாதத்தில் பதினைந்து நாட்களும் திருக்கார்த்திகையை மைய மாகக்கொண்ட மூன்று நாட்களும் விசேட விபூசைகள் நடை பெறுங்காலங்களாகும். இக்காலங்களில் நடைபெறும் விழா வின்போது இலட்சக்கணக்கான முருகனடியார்கள் வந்து கூடுவர். இந்த அடியார்களுக்கு அன்னதானம் செய்யபல மடங்கள் இருந்தன. அவற்றுள் மிகச் சிறந்ததாகக் கருதப் பட்டது இராமகிருஷ்ணமடத்தினரால் நடத்தப்பட்ட அன்ன சத்திரமாகும். தானங்களுள் சிறந்தது அன்னதானமாகும். அன்னதானத்துக்கு விஷேடம் என்னவென்றால் இதிலே தான் ஒருத்தரைப் பூரணமாகத்திருப்திப் படுத்தமுடியும். பணம் நகை, பூமி, வீடு இந்த மாதிரியானவற்றை எவ்வளவு கொ டுத்தாலும் வாங்கிக்கொள்கிறவன் அதற்குமேல் தந்தாலும் வேண்டாம் என்று சொல்லமாட்டான். அன்னம் போடுகிற போதுதான் ஒருத்தன் என்னதான் முட்டச் சாப்பிட்டாலும் ஓர் அளவுக்குமேல் சாப்பிட முடியாது போதும் என்று சொல்கிறான். ஓர் அளவுக்குமேல் போய் விட்டால் ஐயையோ! இனிமேல் போடாதீர்கள் என்று மன்றாடவும் செய்கிறான்.

இத்தகைய அன்னதானம் வெகுகாலமாகவே நடைபெற்று வந்தது. கடந்த ஆறு ஏழு ஆண்டுகளாக அவை நடைபெறு வதில்லை. அரசாங்கம் முக்கியமாக இராமகிருஷ்ணமடத்தை எடுத்துக்கொண்டமையே இதற்கு முக்கியகாரணமாகும். இதனால் பக்தர்கள் வருகையும் குறைந்து கொண்டே வந் தது. பக்தர்களுக்கு அநுசரணையாக இல்லாது வியாபார நோக்கங்கொண்ட கூட்டம் ஒன்று வளர்ந்து வந்தது. தற் போது அதனை யாவரும் உணர்ந்துள்ளனர். அரசாங்கமும் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் சேவையைத் தற்போதுதான் உணர்ந்துள்ளது போலும். மறுபடியும் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் அன்னதான சேவை ஆரம்பிக்க இருப்பதையும் அறிந்து பக்தர்கள் எல்லோருமே குதூகலம் கொள்கின்ற னர். முருகப்பெருமான் தன்அடியார்களைக் காக்கத்திருவுளம் கொண்டுள்ளார். ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் சேவையில் அடியார்கள் எல்லோரும் பங்குகொண்டு பயன் பெறுவார் களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மசிந்தனை

— மார்க்க அரேலியர் —

அடிக்கடி இதை நீ சிந்தித்து நினைத்துக் கொண்டுவருவாயாக. இந்த உலகம் முழுவதும் சேர்ந்து ஒரு ஜீவன்; ஓர் உடல்; ஓர் ஆத்மா; சகல ஜீவகோடிகளும், பொருள்களும் சேர்ந்து ஜீவநரம்பு பாய்ந்த ஒரு சரீரக்கட்டாகும். எல்லாவற்றிற்கும் உயிர் ஒன்றே. எல்லாம் சேர்ந்து உண்டாக்கினது தான் நாம் காணும் ஒவ்வொரு பொருளும். உலகத்தினின்று வேறுபட்டுத் தனியாய் எதுவும் உண்டாகாது. எல்லாம் ஒன்றோடொன்று சேர்ந்தது. இடைவிடாமல் செய்வது போலும். ஊடும் பாவும் போலும் உலகம் நடந்து வருகிறது.

பாறையின் மேல் அலைகள் மோதி மோதிப் புரண்டு கொண்டிருந்தாலும் கல்லானது அசையாமல் நிற்கும். அதைப் போல் உன் உள்ளம் அமைதி பெற்றிருக்க வேண்டும். பேரிரைச்சலுடன் அலைகள் மோதினும் இறுதியில் அடங்கி ஓய்ந்து கிடக்கும். 'ஐயோ! என் துர்ப்பாக்கியம்! இந்த விபத்து எனக்கு வந்ததே' என்பாய். அப்படியல்ல. நீ எண்ண வேண்டியது, ஆ! இத்தகைய விபத்து நேரிட்டபோதிலும் தீரத்துடன் நிகழ்வதைக் கண்டு கலங்காமலும், வருவதை நினைத்து அஞ்சாமலும் இருக்கின்றேனே நான் என்ன பாக்கியவான்! இதைப் போன்ற கஷ்டம் யாருக்கு வரலாம்? ஆனால் எல்லோரும் என்னைப் போல் தீரத்துடன் தாங்கமாட்டார்கள். வந்தது விபத்தேயாயினும் எனக்கு வாய்ந்த மனோநிலை நல்ல பாக்கியம் அன்றோ! மனிதனுடைய உள்ளத்தைப் பழுதுபடுத்தாத ஒரு சம்பவம், எப்படி விபத்தாகும்? வாழ்வின் நோக்கம் கெடாதவரையில் எது நேர்ந்தால் என்ன? நீ எதற்காக வாழ்கிறாய்? இந்த விபத்து உன்னுடைய வாழ்வின் உண்மையான நோக்கங்களுக்கு என்ன தடையாகும்? உன் நடுவு நிலைமையைக் கெடுக்குமா? உன் பெருந்தன்மைக்குத் தடையாகுமா? தெளிவான அறிவு, விவேகம், ஆராய்ந்து செய்தல், சத்தியம், அடக்கம், சுதந்திரம் இத்தகைய குணங்களுக்கு இச்சம்பவத்தால் ஏதாவது கேடுவந்ததா? இக்குணங்களுடைய புருஷனுக்குத் தன் பரிசுத்தமே தனக்கு இன்பம் அல்லவா? எந்த விபத்தும் விபத்தல்ல; அதைப் பொறுக்கும் ஆற்றலுடைமையே பாக்கியம். இதை நினைவில் வை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்நாளைத் தருமநெறியில் நடத்தி, உயிர் நீங்கும் காலம் வந்தபொழுது மரத்தினின்று பழம் எவ்வாறு எளிதாய் நழுவுகிறதோ, அவ்வாறே நீயும் உயிர் துறப்பாயாக, சிற்ப வேலைக்காரர்கள் தங்களுடைய தொழிலில் தங்களுக்குள்ள ஆசையினால் உடம்பில் அழுக்குப் படிந்தும், பசியுடனும் மெய்வருத்தம் பாராமல் தொழிலிலேயே கண்ணாய் இருப்பார்கள். சிற்பவேலைக்காரனுக்குத் தன் வேலையிலுள்ள ஆர்வத்தை விடச் சிறந்த பொருளான உன் மனத்தூய்மையில் உனக்கு அதிக ஆர்வம் இல்லையே! நாடகக்காரனுக்குத் தன் நடனத்திலுள்ள மனப்பற்று அளவு கூட உன் நன்மையில் உனக்கு இல்லையே! உலோபிக்குப் பணத்திலுள்ள ஆசையளவும், இடாம்பீகன் தன்னைப் பிறர் புகழ்ந்து பேசுவதை விரும்பும் அளவுகூட உனக்கு உன் கடமையில் கருத்தில்லை.

இவர்கள் தத்தம் நோக்கங்களிலே வைத்திருக்கும் பற்றினால் உண்ணுவதையும் உறங்குவதையும் கூட மறந்துவிட்டுத் தாம் வேண்டும் பொருளை அடைவதிலேயே கருத்தாக இருப்பார்கள். இவர்கள் விரும்பும் பொருள்களைக் காட்டிலும் தருமம் என்பது உனக்குப் பெரிதாகத் தோன்றவில்லையா?

சிலர் பிறன் ஒருவனுக்கு ஒரு நன்மை செய்தால் அதைத் தங்களுடைய கணக்கில் குறித்துக்கொண்டு பிறகு, அதற்குப் பதில் கேட்பார்கள். சிலர் அப்படிச் செய்யாராயினும் தாம் செய்த உதவியை என்றும் நினைவில் வைத்துக்கொண்டு அவனைக் கடனாளியாகவே பாவிப்பார்கள். வேறு சிலர் தாம் செய்த உதவியை அறியமாட்டார்கள். அதைப்பற்றி நினைக்கவும் மாட்டார்கள். கொடிமுந்திரி பருவக்காலத்தில் நல்ல பழம் கொடுத்தபின் அதைப்பற்றி மறுபடியும் சிந்திக்காது. தன் இயல்புக்கு இசையத் தன்னால் உதவக்கூடியதை உதவிவிட்டு அதைப்பற்றி மறுபடியும் அது கருதாது. குதிரை ஓடுவதும் இப்படித்தான். நாயும் இவ்வாறே வேட்டைக்குப் போகும். தேனீயும் தேனைச் சேர்ப்பது இப்படியே. இத்தன்மையை உடைய மனிதனும் ஒப்புரவறிந்து உதவியபின் அதைப்பற்றிப் பிறருடன் பேசான். கொடிமுந்திரி தான் முன்னீன்ற பழங்களைப்பற்றி நினையாமல் மறுபடியும் அடுத்த பருவத்தில் பழம் தருவது போல் இவனும் உதவி செய்தபின் மறுபடியும் தான் செய்யக்கூடிய வேறு உதவியைப்பற்றியே நினைப்பான்.

வைத்தியன் நோயாளிக்கு மருந்தும் பத்தியமும் நியமிப்பதுபோல் தெய்வம் மனிதர்களுக்குக் கஷ்டம் அளிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயும், அங்கவீனமும், பொருள் நஷ்டமும் இவை போன்ற எல்லாச் சம்பவங்களும் இவ்வாறு தெய்வத்தின் வைத்திய நியமங்களாகவே கருதப்படவேண்டும். உடலின் நோய் தீருவதற்காக வைத்தியன் சொல்லும் பத்தியம் உடலின் தனி உறுப்பொன்றுக்குக் கஷ்டமாகவே இருக்கலாம். அதைப்போல் உலக நடைக்குவேண்டிய சம்பவங்கள் தனிமனிதனுக்குத் துன்பங்களாகவே தோன்றலாம். உலகம் முழுவதும் ஓர் உடல். எல்லோருடைய உடல்களும் சேர்ந்து ஓர் உலக உடலாம். எல்லாக் காரண காரியங்களும் சேர்ந்து உலக காரண காரியமாகிறது. அதுதான் உலகம். அதுதான் விதி என்று நீ எண்ணுவது. நீ விதி என்று வெறுப்பது உலகத்திற்கு உலக வைத்தியன் நியமித்த ஒரு பத்தியமேயாகும். ஆகவே விவேகமுள்ள ஒருவன் வைத்தியனுடைய கட்டளைகளைச் சந்தோஷமாய் ஒப்புக்கொள்வதுபோலவே விதியையும் ஒப்புக்கொள்ள வேண்டும். மருந்து கசக்கும். பத்தியம் கஷ்டமாய்த்தான் இருக்கும். ஆனால் நோய் தீரும் என்று அதை ஒப்புக்கொள்ளுகிறோம். உன் உடலின் நோயைத் தீர்க்க எவ்வாறு விரும்புகிறாயோ, அவ்வாறு உலகம் முழுவதும் திரண்ட ஓர் உயிராகக் கருதி அதன் நன்மையையும் விரும்பு. கஷ்டமாகத் தோன்றினாலும் விதியாக வந்ததைச் சந்தோஷமாக ஒப்புக்கொள்ள வேண்டும். அது உலக நலத்திற்காகக் கடவுள் அனுப்பின மருந்தேயாகும். உலகத்தின் நன்மைக்காக அல்லாமல் ஒருவனுக்கு மாத்திரம் இந்தக் கஷ்டம் நேராது.

ஆகவே, உனக்கு எது நேரிடினும், அதை நீ மனக்குறைவின்றி ஒப்புக்கொள்ள இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது உனக்கென்று வந்த சம்பவம் இது. நீ எந்தச் சக்தியினால் உண்டானாயோ, அதே சக்தியிலிருந்து இதுவும் உண்டாயிற்று. ஆகையால், இதை நீ ஒப்புக்கொள்ள வேண்டும். இரண்டாவது எல்லா ஜீவராசிகளின் சேமத்திற்கும், உலகம் வளர்ந்து பரிபூரணமாவதற்கும் தனிஜீவர்களைத் துன்புறுத்துவதுபோல் தோன்றும் சம்பவங்கள் உண்டாகின்றன. ஒன்றாக அமைக்கப்பட்ட இந்த உலகத்தில் ஒரு பாகத்தை வெட்டிப் பேதித்தால் அதன் சுகமும் அழகும் குறையும். உலக அமைப்பில் நடக்கும் ஒரு விஷயத்தைக் குறித்து நீ தனித்து அதிருப்தி அடைவது ஒரு பாகத்தை வெட்டிப் பேதித்த தோஷமேயாகும். இயற்கைத் தருமத்திற்கு இடையூறு செய்த குற்றமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்த ஒவ்வொரு காரியத்தையும் அறநெறி வழுவாமல் செய்து முடிக்க உன்னால் ஆகாமற் போனால், அதனால் காரியத்தில் வெறுப்புக்கொள்ளாதே. முயற்சியையும் விட்டு விடாதே. நீ எடுத்தகாரியம் எம்மட்டும் நன்கு முடிந்ததோ அதற்காக மகிழ்ச்சியடைவாயாக. எந்தப்பாகம் நன்குமுடியவில்லையோ அதைச் செய்து முடிக்குமாறு மறுபடியும் உற்சாகத்துடன் முயற்சிப்பாயாக. பள்ளிக்கூட உபாத்தியாயரிடம் குழந்தைகள் வெறுப்புடன் போவதுபோல் நடக்காதே. அவ்விதம் நடந்தாயானால் மெய்யறிவு வராது. கண்வலிக்காகக் கண்ணை அலம்பி நோய் தீர்த்துக் கொள்ளப்போவது போலவும், காயப்பட்டால் ஒத்தடம் போட்டு மருந்து போட்டுக் கொள்ளப்போவது போலவும் சுறுசுறுப்புடனும் சந்தோஷத்துடனும் செல்வாயாக. மனதில் சாந்தியடைய மெய்யறிவை நாடு. எல்லாம் அறிந்தவன் என்கிற கர்வம் காட்டாதே.

சித்து. சடம் இவ்விரண்டின் சேர்க்கையால் நான் உண்டாயிருக்கிறேன். இரண்டில் எதுவும் சூனியமாக அழிந்து போகாது. சூனியத்திலிருந்து உண்டாக வில்லை. ஆகையால், அது சூனியமாய்ப் போக முடியாது. ஒவ்வொரு பகுதியும் விகாரப்பட்டு உலகத்தில் வேறு பொருளில் சேர்க்கையாகும். மறுபடி அவ்வுருவமும் மாறி வேறு பொருள்களில் போய் சேரும். இப்படி அனந்த காலமும் மாறிக்கொண்டிருக்கும். ஆகையால் எனக்கு அழிவென்பது கிடையாது. முந்தியும் அனந்த காலம் பிந்தியும் அனந்தகாலம். உருவம் மாறிக் கொண்டே வருவேன். பிரளயகாலங்களிலும் கற்பங்களிலும் உலகம் முடிவதாக வைத்துக்கொண்டாலும் இதுஉண்மையேயாகும்.

---

# முக்கனி ஏன் இனிக்கவில்லை?

சுக்கில் சிறந்ததோர் மருந்தும் இல்லை
சுப்பிரமணியனுக்கு நிகரான தெய்வமும் இல்லை
சுந்தர வடிவேலவன் புகழுக்கு ஏது எல்லை-திரு
சூலிமகன் முருகன் பெயர் சொன்ன நாவிற்கு
சுவைதரும் முக்கனி இனித்திட நியாயமில்லை.

—எஸ். ஏ. பத்மநாபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீயவழக்கங்களைக் கட்டுப்படுத்தல்

— சுவாமி சிவானந்தா —

இது கலியுகம். இது விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் நிறைந்த காலம். இது நவநாகரிகமும் கற்பனை எண்ணங் களும் நிறைந்த காலம். இது தற்கால நவநாகரிகம். இது சினிமா, ஆகாய விமானம், ரேடியோ, நாவல் படிப்பு மிகுந்த காலம். தர்மம் தளர்ந்துவிட்ட காலம். அது முடமாகி எங் கோ ஒரு முடவர்கள் ஆஸ்பத்திரியில் கிடக்கிறது. மக்கள் தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் நடக்கின்றனர். கட்டுப் பாடு என்பதே கிடையாது. ஒவ்வொரு மனிதனும் ஒரு குரு வாக இருக்கிறன். அவன் பாரமார்த்திக உபதேசங்கள் எதை யும் சட்டை செய்வது கிடையாது. காமம் ஒவ்வொருவரை யும் ஆட்டிப்படைக்கின்றது. நேர்மையான சிந்தனுசக்தி, விவேகம், விசாரம் ஆகியவை எல்லாம் புறமுதுகுகாட்டி ஓடி விட்டன. சாப்பிடுதல், குடித்தல், குழந்தைகளைப் பெறுதல் ஆகியவைதான் வாழ்க்கையின் இலட்சியமாக இருந்து வரு கின்றன. மோக்ஷம் என்பது ஒரு கற்பனைப் பொருளாகவும் கனவுக்காட்சியாகவும் ஆகிவிட்டது. எல்லோரிடத்தும் சகல விதமான தீய குணங்களும் குடிபுகுந்து விட்டன.

சிவாஜியினுடைய அரசாட்சிக் காலத்திலே சுவாமி இராமதாசருடைய ஏற்பாட்டின்படி மக்கள் ஒருவரை ஒருவர் காணும் போது 'ராம் ராம்' என்று கூறி வரவேற்றனர். எவரெ வர்கள் எந்தெந்த மூர்த்தியை உபாசனை செய்கிறர்களோ அந் தந்த மூர்த்தியின் மந்திரத்தைக் கூறியே வரவேற்கும் பாங்கு ஒன்று ஒரு காலத்தில் இருந்தது. அவர்களுடைய உள்ளத்தில் அந்த மூர்த்தி தியானமும் நாவில் மூர்த்தியின் மந்திரமும் இருந்தமையினுல் உடனே உள்ளத்தில் உள்ளது வெளியே வந்து விடுகின்றது. ஆகவே, சைவர்கள் ஒருவரை ஒருவர் காணும்போது 'ஓம் நமசிவாய' என்று சொல்லி வரவேற்றல் மிகச் சிறந்ததாகும்.

இன்று அந்த வழக்கம் ஒழிந்து விட்டது. இறை நாமத் தைச் சொல்லி வரவேற்பது கிடையாது. அதற்குப் பதிலாக ஒரு பக்கெட் சிகரெட்டையும், ஒரு கோப்பை விஸ்கியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து வருவேற்கிருன். ஒருமுறை மதுவானது மனிதனுடைய உடலுக்குள் சென்று விட்டால் அது அவனை நிரந்தரக் குடிகாரனுக்கி விடுகிறது. அப்பழக்கம் போதத்தல் போதத்தலாகக் குடித்து நினைவிழந்து சாக்கடையில் புரளும் வரை விடாது பற்றிக் கொள்ளக்கூடிய அப்பேர்ப்பட்ட பலம் வாய்ந்த பிசாசு ஆகும். நல்ல கௌரவமான குடும்பத்தில் பிறந்த நமது இந்துப் பெண்மணிகள்கூட புகை பிடித்தலையும், மது அருந்துதலையும் மேற்கொண்டிருக்கின்றனர். ஆரம்பத்தில் தங்கள் காம உணர்ச்சியைத் தூண்டுவதற்காகச் சிறிய அளவில் ஆரம்பித்து நாளடைவில் இப்பழக்கத்தை விருத்தி செய்து கொள்கின்றனர். மதுவானது மூளை அணுக்களையும் அழித்து விடுகிறது. பலவித நரம்பு வியாதிகளுக்கு இதுவே காரணமாகிறது. குடிகாரனைத் திருத்தி மாற்றுவது கடினம். பழக்கம் மிகவும் தீவிரமாகிவிடுகிறது. எப்பேர்ப்பட்ட நல்லுபதேசமும் எவ்வித நன்மையும் உண்டாக்காது. ஒரு குடிகாரன் ஒன்றுக்கும் உதவாதவன். சமூகத்திற்குக் கேடுவிளைவிப்பவன். குடிகாரர்களின் தொடர்பை ஒவ்வொருவரும் நீக்கி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக வருவது உலகெங்கிலும் சர்வசாதாரணமாகக் காணப்படும் புகைபிடிக்கும் வழக்கம். புகைபிடிப்போர் தங்கள் பழக்கத்திற்குஆதரவாகச் சிறிது தத்துவமும் மருத்துவக் கருத்தும் கூறுவர். புகைபிடிப்பதால் வயிறு சுத்தமாக இருக்கிறது. காலையில் எனக்கு நன்கு மலம் கழிகிறது. அது சுவாசப்பைகள், மூளை, இருதயம் ஆகியவற்றிற்கு உற்சாக மூட்டுகிறது. புகைபிடித்து விட்டுத் தியானத்தில் அமர்ந்தால் நல்ல தாரணை ஏற்படுகிறது என்று அவர்கள் கூறுகின்றனர். என்னே அற்புதமான தத்துவம்! தங்கள் கட்சிக்கு ஆதரவாக அபாரமானவாதங்களைக் கூறுகின்றனர். அவர்களால் இத்தீயபழக்கத்தை விடமுடியாது. சில மணிநேரத்தில் ஒரு ரின் சிகரெட்டை அநாயாசமாக ஊதித்தள்ளக்கூடிய பெருங்குடிகள் இருக்கின்றனர். இப்பழக்கம் இளவயதிலிருந்து ஆரம்பமாகிறது. ஒரு சிறுவன் புகைபிடிப்பதற்கு ஆசைப்படுகிருன். அவன் தனது மூத்த சகோதரனுடைய சட்டைப்பையிலிருந்து ஒரு சிகரெட்டைத் திருட்டுத்தனமாக எடுத்து முதலில் சுவைத்துப் பார்க்கிருன். அவனுடைய நரம்புகள் சிறிது தூண்டிவிடப் படுவதால் அவன் அத்திருட்டை தினந்தோறும் தொடர்ந்து செய்கிருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது காலம் சென்றதும் அவனால் ஒரு சில சிகரெட்டு களைக் கொண்டு சமாளிக்க முடிவதில்லை. தனக்கெனச் சுயேச்சையாக ஒரு ரின் சிகரெட்டுக்கு வேண்டிய பணத்தை திருட ஆரம்பிக்கிறான். பெற்றோரும் உற்றாரும் எல்லோரும் பெரிய அளவில் புகைபிடிப்பவர்கள். இந்தப் பையன்களுக்கு அவர்கள்தான் உண்மையான குருமார்களாக இருக்கின்ற னர். என்ன கேவலமான நிலை! அவர்கள் நிலை அதி பயங்க ரமானதல்லவா! தங்களுடைய பையன்களும், பெண்களும் தீய வழிக்குச் செல்வதற்கு இந்தப் பெற்றோர்களே முற்றிலும் பொறுப்பாளிகளாக இருக்கின்றனர். சில காலம் கழித்து ஏதாவது ஒரு போதைவஸ்து அத்தியாவசியப் பொருளாகி விடுகிறது. பிறகு அவனால் அப்பழக்கத்தை விடுவது என் பது இயலாத காரியமாகி விடுகிறது. அவன் புகை பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகி விடுகிறான். பழக்கங்களின் மூலம் மாயை அழிவை உண்டுபண்ணுகிறான். இதுதான் அவன் செய் யும் வேலைகளின் இரகசியம். புகைப்பதன் மூலம் உங்க ளுக்கு இம்மியளவு கூட பயன்கிடையாது. புகைபிடிப்பதால் இருதயவலி, 'புகையிலை இருதயம்' முதலிய நோய்களும் கண் கள் சம்பந்தப்பட்ட வியாதிகளும் ஏற்படுவதோடு உடல் முழுவதும் விஷமயமாக்கப்படுகிறது. பலவித நரம்பு வியாதி களும், மலட்டுத்தனமும் ஏற்படுகின்றன.

இப்பொழுது அடுத்தபடியாக வருவது மற்றொரு கெட்ட வழக்கம். இது இன்னும் சர்வ சாதாரணமாகக் காணப்படுகி றது. இதுதான் வெற்றிலை போடும் வழக்கம். புகைபிடிக்கும் தங்கள் சகோதரர்களைப் போலவே இவர்களும் தங்கள் பழக் கத்திற்கு ஆதரவாக பலவித தத்துவ நியாயங்களை அற்புத மாக எடுத்துக்கூறுகின்றனர். "வெற்றிலை வயிற்றை நன்கு தூண்டிவிடுகிறது. இது ஆகாரத்தைச் சீரணிக்கச் செய்து நல்ல பசியை உண்டாக்குகிறது" என்று அவர்கள் கூறுகின்ற னர். அவர்களுடைய சிவந்த உதடுகளையும் வாயில் வெற்றிலை யைக் குதப்பிக்கொண்டு அவர்கள் பேசுகின்ற பாணியையும் பாருங்கள். அவர்கள் நாக்கு தடித்துவிடுகிறது. அவர்களால் வார்த்தைகளைச் சரிவர உச்சரிக்கமுடியாது. எச்சில் துப்புவ தற்குப் படுக்கைக்குப் பக்கத்திலேயே அவர்களுக்கு ஒரு எச் சில் பாத்திரம் தேவைப்படுகிறது. இது ஒரு மோசமான கெட்ட வழக்கம். அவர்கள் இருக்குமிடம் எப்பொழுதும் அசு சியாகவே இருக்கிறது. பணம் விரயமாக்கப்படுகிறது. அந் தப் பணத்தை உபநிடதங்களையும் மற்ற தத்துவ ஞான சம் பந்தப்பட்ட புத்தகங்களையும் வாங்குவதற்குச் செலவிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வெற்றிலைக்கு அடிமையாகிவிடுகின்றனர். வெற்றிலை போடாமல் ஒரு சில நிமிடங்கூட அவர்களால் இருக்க முடிவதில்லை. அவர்கள் வெற்றிலையோடு புகையிலையையும் சேர்த்து போட்டுக்கொள்ளுகின்றனர். இது மற்ெறாரு தீய வழக்கம். சிலர் 'கொகைன்' என்னும் மயக்க மருந்தையும் வெற்றிலையோடு சேர்த்து உபயோகிக்கின்றனர். இது இன்னும் படுமோசமான வழக்கம். மூக்கு நரம்புகளைத் தூண்டிவிடுவதற்கு சிலர் வாசனைப் பொடியை உபயோகிக்கின்றனர். இதுவும் ஒரு தீய வழக்கம். அவர்கள் சட்டைப் பையிலே ஒரு கக்கூசை எடுத்துச் செல்லவேண்டியிருக்கிறது. அவர்கள் உடலும் உடையும் முழுவதும் சகிக்கமுடியாத நாற்றம் வீசுகிறது. நீங்கள் அவர்கள் அருகில் செல்லமுடியாது. கையில் இருக்கும் பொடி தீர்ந்துவிட்டால் அவர்கள் தங்கள் சுய மரியாதையைக்கூட விட்டுவிட்டு, தெருவில் செல்லும் யாரிடமும் ஒரு சிட்டிகை பொடிக்குக் கையை நீட்டத் தயங்கமாட்டார்கள். இத்தீய வழக்கங்கள் காரணமாக மனிதன் எவ்வளவு பலஹீனனாக ஆகிவிடுகிறான் பார்த்தீர்களா!

அந்தோ பரிதாபம்! கஞ்சா, அபினி, லேகியம் போன்றவைகள் ஏனைய சில போதை வஸ்துக்கள். சில சாதுக்கள் இவற்றை ஏராளமாகச் சாப்பிடுகின்றனர். சம்போகத்தின் போது தூண்டு கோலுக்காகவும், உற்சாகத்திற்காகவும் மக்கள் அபினியையும் சாப்பிடுகின்றனர். கஞ்சா மனதை ஏகாக்கிரமாகவும் ஸ்திரமாகவும் வைத்திருக்கிறது என்று குடிகார சாதுக்கள் கூறுகின்றனர். இது முற்றிலும் மூடத்தனம். மயக்கவசப்பட்டிருப்பவன் மனத்தின் அசைவுகளைக்கவனிக்க முடியாது. இது ஏகாக்கிரமாகாது. இது வெறும் பிரமையேயன்றி வேறில்லை. மதுவைப்போல் அதில் ஒரு விதமான உணர்ச்சி வேகத்தை அவர்கள் பெறுகின்றனர். இதுவும் ஒரு படு மோசமான தீய வழக்கம். இந்தப்போதை வஸ்துக்கள் எல்லாம் உடல் நலத்தை நஞ்சாக்கி மனிதனை முன்னேறுவதற்குத் தகுதியற்றவனாக்கிவிடுகின்றன. அவர்கள் இப்போதை வஸ்துக்களுக்கு அடிமையாகி விடுகின்றனர். அவர்கள் தங்கள் பணத்தைத் தவறானவழிகளில் விரயமாக்குகின்றனர்.

ஒருநாளைக்கு பலதடவை காப்பி தேநீர் ஆகியவற்றை அருந்துபவர்கள் ஒரு பழக்கத்தை விருத்தி செய்து கொள்ளுகின்றனர். அவர்கள் இந்தப் பானங்களுக்கு அடிமையாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகின்றனர். மிதமாக இந்தப் பானங்களை அருந்துவதால் கடின உழைப்பாளிகளுக்குப் பயனுள்ளவையாக இருக்கின்றன. ஆனல் மனிதன் தனது இச்சாசக்தியை இழந்து அளவுக்கு மிஞ்சுகின்ற ஆபத்தைத் தடுக்கக் கூடிய சக்தியற்றவனுகிவிடுகின்றுன். அப்பொழுதுதான் தொந்தரவு ஏற்படுகிறது. அவன் ஒரு அடிமையாகிவிடுகிருன். அவன் எஜமானுக இருந்து அதை எந்த நேரத்திலும் விட்டுவிடக்கூடிய மனேபலம் உடையவனுக இருந்தால் தொந்தரவு ஒன்றும் கிடையாது.

நாவல் படிப்பது மற்ருெரு தீய வழக்கம். காமம், காதல் சம்பந்தப்பட்ட நாவல்களைப் படிக்கும் வழக்கமுடையவர்களால் அவற்றைப் படிக்காமல் ஒரு விநாடிகூட இருக்க முடியாது. எப்பொழுதும் அவர்கள் நரம்புகள் தூண்டப்பட்டுக் கொண்டே இருப்பதை அவர்கள் விரும்புகிருர்கள். நாவல் படிப்பு மனதைக் கீழ்த்தரமான காம உணர்ச்சிகளால் நிரப்பி காமவேகத்தைத் தூண்டிவிடுகிறது. இது அமைதிக்கு ஒரு பெரிய விரோதி.

சிறு சந்தாத் தொகைகளை வசூலித்து நாவல் புத்தகங்களை விநியோகம் செய்கின்ற நூல் நிலையங்களைப் பலபேர் ஆரம்பித்திருக்கின்றனர். நாட்டிற்கு எவ்வளவு தீங்கு இழைக்கிறேம் என்பதை அவர்கள் உணரவே இல்லை. தங்கள் ஜீவனேபாயத்திற்கு அவர்கள் வேறு ஏதாவது வழி தேடிக்கொண்டால் மிகவும் நல்லது. காம உணர்ச்சியைத் தூண்டிவிடுவதற்கு உதவி புரியும் இந்தப் பயனற்ற நாவல்களை விநியோகிப்பதன் மூலம் அவர்கள் இளைஞர்களின் மனத்தைப் பாழாக்குகின்றனர். ஆகாய மண்டலம் முழுதும் விஷமாக்கப் படுகிறது. செய்தித்தாள் வாசிப்பதும் தீமை பயப்பதாகும். சாப்பிடும்போதுகூடச் சிலரால் பத்திரிகை வாசிக்காமல் இருக்க முடியாது. ஏதாவது பரபரப்பான செய்திகளை எப்பொழுதும் கேட்டுக் கொண்டே இருக்க அவர்கள் விரும்புகின்றனர். பத்திரிகை வாசிக்காவிடில் அவர்கள் சோர்ந்து காணப்படுகின்றனர். அவர்களது தியானமும், தனிமையும் கூடிய வாழ்க்கைக்கு அவர்கள் தகுதியற்றவர்களாகிவிடுகின்றனர். அவர்களைத் தனியாக மூன்று நாளைக்கு வைத்துப் பாருங்கள். அவர்கள் தண்ணீரை விட்டுப் பிரிந்த மீனைப் போலத் துடிப்பார்கள். செய்தித்தாள்களைப் படித்தால் மனம் எப்பொழுதும் புறநாட்டத்திலேயே இருப்பதோடு அது உலகாயத சம்ஸ்காரங்களைப் புதுப்பித்து இறைவனை மறக்கச் செய்துவிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படங்கள் மனிதனிடம் தீய சுபாவத்தை உண்டாக்கிவிட்டன. சினிமாக் காட்சிக்குப் போகாமல் அவனால் ஒருநாள்கூட இருக்கமுடிவதில்லை. அவனுடைய கண்கள் ஏதாவது சில அரை நிர்வாணப் படங்களையும், சில வர்ணங்களையும் பார்க்கவும், அவனுடைய காதுகள் சிறிது சங்கீதத்தைக் கேட்கவும் விரும்புகின்றன. நடிக நடிகைகள் படங்களில் கட்டியணைத்து முத்தமிடுவதைப் பார்க்கும் பொழுது இளம் பெண்களும் பையன்களும் காமவசப்படுகின்றனர். ஆன்மீகப் பாதையில் முன்னேற விரும்புகிறவர்கள் திரைப் படங்களுக்குச் செல்வதை அறவே நீக்கவேண்டும். மத சம்பந்தமான புராணப்படங்கள் எனப்படும் படங்களுக்குக்கூட அவர்கள் செல்லக்கூடாது. அவைகள் உண்மையாகவே மத சம்பந்தப்பட்ட படங்கள் அல்ல. அது மக்களைக் கவர்ந்து பணத்தைப் பறிப்பதற்குக் கையாளப்படும் ஒரு தந்திரம். அதில் நடிக்கும் நடிக நடிகைகளின் ஆன்ம நாட்டம் எவ்வளவு? பார்ப்பவர்கள் உள்ளத்தை உயர்த்தவல்ல நல்ல நீதிகள் கொண்ட கவர்ச்சிகரமான கதைகளை ஆத்மீகமான மக்களால் தான் நடித்துக்காட்டமுடியும்.

பகலில் தூங்குவது மற்றொரு தீய பழக்கம். இது வாழ் நாளைக் குறைக்கிறது. நேரம் பெருமளவில் வீணாக்கப்படுகிறது. அது சோம்பேறித்தனத்தையும் மந்த குணத்தையும் உண்டாக்குகிறது. அதனால் பித்தம்; அஜீர்ணம் மற்றும் பலவிதமான நோய்கள் ஏற்படுகின்றன. நீங்கள் சீக்கிரம் வளர்ச்சி பெற விரும்பினால் அப்பழக்கத்தை அடியோடு விட்டுவிட வேண்டும். ஒவ்வொரு வினாடியையும் கைப்பற்றி சரியான வகையில் பயன்படுத்துங்கள். வாழ்க்கை குறுகியது. காலம் பறந்தோடுகின்றது. மரணம் காத்துக்கொண்டிருக்கிறது. தீய வழக்கம் ஒன்றுகூட இல்லாதவன் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறான் பார்த்தீர்களா! அவன் வாழ்க்கையில் பெருவெற்றி எய்துவதோடு யோக சாதனையிலும் தீவிரமாக ஈடுபட முடியும்.

---

ஆயுள் சந்தா ஆதரவாளர்

**Maj. M. ஜெயக்குமார் M.C.I.P. அவர்கள்,**
கிரைக் ஸ்ரேற் பிளான்டேசன்,
பண்டாரவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்துப் பிள்ளையார்

செஞ்சொற் கவிமணி புலவர்: மா. வேங்கடேசன் எம். ஏ.,
காஞ்சிபுரம் - தமிழ்நாடு.

நெஞ்சே இடமாக நிலைத்துள்ள சான்றோருள்
நஞ்சே எனஉலக நலந்துறந்த பட்டினத்தார்,
அஞ்சே எழுத்தோதி ஆறுதலைத் தானடைந்து
எஞ்சா தருளமுதை எப்போதும் துய்த்திருந்தார்!

பாரனைத்தும் பொய்யெனவே பற்றுவிட்ட நற்றவரை
ஊர்நினைத்துப் போற்றி உற்சவங்கள் செய்திருக்கும்!
பேர்நினைத்துப் பின்தொடரப் பெயர் கொடுங்கள் என்றிட்டால்
யார் நினைத்துத் தந்திடுவார்? சீர்நினைத்துப் பாருங்கள்!

ஆசையே சிலருக்கு அன்பார் எசமானன்!
காசே அவர்களுக்குக் கடவுள் உயிரெல்லாம்!
பூசை புரிந்ததனைப் போற்றி வழிபட்டுத்
தாசராய் வாழ்வதிலே தனியின்பம் அவர்க்குண்டு!

மாடுண்டு மனைவி மக்களுண்டு நாமுண்டு
ஈடுண்டோ. என்றிங் கிறுமாந் திருப்பவர்க்குக்
கேடுண்டெனா எண்ணிக் கினைத்திட்ட செல்வமெலாம்
நாடுண்ண விட்டவரின் நாட்டம் புரிந்திடுமோ?

வயிற்றை நிரப்புவதே வாய்பெற்ற பேறென்று
அயிற்றும் அறுசுவைக்கே அழுது புலம்பிடுவோர்
உயிரை அழிக்கின்ற உணவாசை விட்டுசிவப்
பயிரை வளர்த்தவர்தம் பாடத்தைக் கற்பாரோ?

ஆசை விளைவித்த அறுவடையாம் துன்பத்தைக்
காசளித்து வாங்கக் காத்திருப்பார் சிலபேர்!
நாசக் குழியினிலே நாடி விழும்அவர்க்குப்
பாசம் விடுத்துயர்ந்தார் பண்பு விளங்கிடுமோ?

விண்ணோர் அமுதெனினும் வேண்டா தறிவிழந்து
பெண்ணோர் அமுதுண்டு பித்தேறிப் போனவர்கள்
பண்ணார் மொழியார்மேல் பற்றுதல்தான் வையமெலாம்
புண்ணான தென்றுரைக்கும் புனிதருரை கேட்பாரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணும் உணவுக்கும் உறவுக்கும் வாழதினம்
பண்ணும் தொழிலுக்கும் பயந்தடிமை செய்திடுவோர்
வன்னெஞ்சத் தோடெதிரில் வந்த அரசனையும்
முன்னிற்க வைத்தவரின் முதன்மை யுணர்வாரோ?

நாட்டை வதைத்துநிதம் நல்லோர் மனங்கலங்க
வீட்டை வளர்க்கின்ற வினையிலே தேர்ந்தவர்கள்
ஓட்டப்பம் தந்து உயிரழிக்க எண்ணியவள்
வீட்டப்பம் போன வினைவலியைக் காண்பாரோ?

மூலமும் காணுத முடிவும் தெரியாத
சீல வடிவான சிவனென்னும் பேரானை
ஞால வடிவிலெலாம் நாடி வணங்கியவர்
காலை வணங்குதற்குக் கற்பதுவே சாத்திரமாம்!

வாயின் சுவைதுறந்து வாட்டும் துயர்மறந்து
தேயம் துறந்து திசைமறந்து போனாலும்
தாயை மறவாது தாவிவந்த புத்திரரே
கோயில் வடிவினிலே கோபுரமாய் நிற்பவராம்!

புத்திக்குள் ளேபுகுந்து பூரணமாய் நின்றவனை
பக்திக்குள் ளேவைத்துப் பாட்டாய் வடித்தவரைச்
சித்தத்தே வைத்துச் சிறிது நினைத்தாலும்
முத்திக் கடலினிலே மூழ்கித் திளைத்திடுவர்!

காதற்ற ஊசியினைக் காட்டி உரைத்திட்ட
தீதற்ற வாக்கால் தெளிவுற்ற மெய்ஞ்ஞானி
கோதற்ற வாழ்வின் குறிக்கோள் உணர்வோர்க்குச்
சாதுக்கம் தீயில் சருகாய் எரிந்துவிடும்.

பட்ட மரம்போல பற்றெல்லாம் விட்டவரும்
குற்றம் தனைப்போக்கிக் குறைகளைய வேண்டுகிருர்!
கற்றவர்கள் போற்றுகின்ற கச்சியே கம்பனிடம்!
சிற்றறிவோர் நாமிதனைச் சிந்தித்தால் வாழ்ந்திடுவோம்!

ஞான ஒளியினிலே நடமாடும் வித்தகர்தாம்
ஈன உலகமது ஈடேற வேண்டியதை
ஊனம் தனைவிட்டு உணரும் திறம்பெற்ருல்
மோன மலையேறி முத்திநிலை யடைவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமி ராமதாஸ் அருளுரைகள்

# எனது நெஞ்சைக் கொள்ளைகொண்ட கிருஷ்ணா!

— ம. சி. சிதம்பரப்பிள்ளை —

மீராபாய் என்பவர் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் உயர்ந்த பக்தையானவர். இவர் விவாகமானவராக இருந்த போதிலும் தமது வாழ்வை கிருஷ்ண பரமாத்மாவுக்கு அர்ப்பணித்துவிட்டார். விவாகத்தின் பின்பும ஸ்ரீ கிருஷ்ணனை வணங்குவதும் பாடி மகிழ்வதுமாக இருப்பதனைக் காண முடிந்தது. தெய்வீகம் நிறைந்த அதி உயர்ந்த தனது ஆண்டவனை அடைவதற்கு அவஸ்தைப்பட்டுக்கொண்டு அதேவேளை உலோகாயுத வாழ்க்கைக்கு முற்றும் மாறுபட்டவராகக் காணப்பட்டார்.

மீராபாய் ஒரு அரசகுடும்பத்தைச் சேர்ந்த இளவரசி. உதயபுரி இளவரசனுக்கு மனைவியாக்கப்பட்டார். எல்லையற்ற பக்திமயக்கம் காரணத்தால் இவளது மைத்துனியினாலும் மற்றவர்களாலும் அதிக துன்பத்துக்குள்ளானாள். அவளது நாயகன் மீராபாய் மீது அன்பாகவும் இரக்கமாகவும் நடந்துவந்தார். ஒரு நாள் தமது மனைவியைப் பார்த்து மேல்வருமாறு சொன்னார். "யான் உமது முறையாக விவாகம் செய்த நாயகன்! ஆகவே உமது அன்பையும் பாசத்தையும் முற்றாகப் பெறும் உரித்துடையவன். ஆனால் நான் உம்மிடம் வரும்போதெல்லாம் வெறி கொண்ட தெய்வீகமான பரவச நிலையில் காணப்படுகின்றீர். என்னுடன் ஒரு சிறு நேரமாவது உரையாட நேரமில்லாது இருக்கின்றீர். நான் மிகவும் ஆவலோடு விரும்புவது, உமது அன்பில் ஒரு பகுதியையாவது என்னுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதே! இதற்கு என்ன பதில் கூறப் போகின்றீர்?"

மீராபாய் பதில் கூறுகின்றார்:- "எனது நாயகரே! தாங்கள் கூறியது முற்றிலும் உண்மையானது. கடமை உணர்ச்சியுள்ள மனைவி எப்போதும் நாயகனுக்கு சேவை செய்வதோடு அன்பையும் சொரிய வேண்டும்; ஆனால் யான் என்ன செய்வது? நான் சிறுமியாக இருந்த நாள்தொட்டே ஸ்ரீ கிருஷ்ணனிடம் என்னை அர்ப்பணித்துவிட்டேன். எனது இருதய அறை அவனால் நிரம்பிவிட்டது. உமக்கு அங்கு தங்குவதற்கு இடம் இல்லை. யான் செயலற்றவளாக இருக்கின்றேன். யான் உம்மிடம் அன்பு செலுத்த வேண்டுமெனத் தீர்மானித்தாலும் அதுதான் முடிவதில்லை! ஆகவே எனது நிலையை முற்றாக உணர்ந்த தாங்கள் என்னை முற்றாக மறந்துவிடுவது எவ்வாறான உயர்ந்த அனுக்கிரகச் செயலாகும்"

மாதாஜி வாழ்க! சுவாமி ராமதாஸ் வாழ்க!
எங்கும் இன்பமே சூழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாங்காசனம்

— யோகி இ. வைரவநாதர் —

சர்வ அங்கங்களுக்கும் புனித ஆரோக்கியத்தைக் கொடுப்பதால் இப்பெயர் பெற்றது.

## பழகும் முறை:

விரிப்பில் மல்லாந்து படுத்துக் கொள்ளவும். பின், கால்களை ஒன்றோடொன்று சேர்த்தவாறே உயரத் தூக்கவும். இப்போது இரு கைகளும் இரு தொடைகளையும் தாங்கியவண்ணம் மூச்சை வெளியில் விட்டபடி இடுப்பிலிருந்து கால்களை உயரத் தூக்கவும். இப்படியே உயரப் போகும் போது கைகளையும் முழங்கைகள் கீழேபட இடுப்புப்பக்கமாக அணைத்துத் தாங்கிக் கொள்ளவும். இம்மாதிரித் தாங்கிக் கொண்டு உடம்பை முதுகு, இடுப்பு, கால்கள் உயர நெட்டக் குத்தலாய் நன்றாக நீட்டி மோவாய்க்கட்டை நெஞ்சோடு அமுக்கியவாறு பிடரியில் நிறுத்தி நிற்கவும்.

## கவனிக்கவேண்டியவை:

உடல் தோள்மேல் தலைகீழாய் நிற்கிறது. இந்நிலையில் கால்கள் பாதம்வரைக்கும் ஒன்று சேர்ந்திருக்க வேண்டும். மூச்சைக் கட்டாது மெதுவாக விட்டு வாங்கவும். குரல்வளையில் மனதை வைக்கவும். வாய், கண் மூடியவாறு இருக்க வேண்டும். உமிழ்நீர் விழுங்குவதோ தும்முவதோ தேவையானால் ஆசனத்தைக் கலைத்துக் கீழ் வந்த பிறகே செய்ய வேண்டும். இவ்வாறு சில விநாடிகள் நின்ற பிறகு கால்களை முன்பக்கம் சிறிது சாய்த்து, கைகளால் இடுப்புப்பக்கமாகப் பிடித்து முதுகைக் கீழே இறக்கி, மெதுவாக இடுப்பை விரிப்பில் அமர்த்திக் கொள்ளவும். பின், கால்களையும் நீட்டி கைகளையும் பக்கத்தில் நீட்டி, இளைப்பாறிக் கொள்ளவும். நன்றாகப் பழகிய பின் ஒரேதடவையில் பத்து நிமிடம் வரையில் நின்றால் போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலன்கள்:

"தைராய்ட்டுக்கு" அதிக இரத்தம் வரச்செய்கின்றது. தைராய்ட்டில் எப்பொழுதுமே எந்தவிதமான கோளாறு களும் வராதிருக்க சர்வாங்காசனத்தைச் செய்துவரல் வேண்டும். இவ்வாசனத்தால் குரல்வளையின் இருபக்கத்திலு முள்ள 'தைராயிட்' கோளத்தில் இரத்தம் தேங்கி அது நன்கு பலம்பெறுகிறது. அது பலம்பெறவே சர்வ அங்கங்களையும் நன்கு இயக்குகின்றது. இதனுல் இளமையும், சுறுசுறுப்பும் உண்டாகிறது. தைராய்ட் நோயுற்றல் புத்தி மங்குதலும், ஞாபகசக்திக் குறைவும், பேச்சுத் தடுமாற்றமும், கொன்ளை கிழத்தன்மையும் உண்டாகும்.

இவ்வாசனத்தால் இருதயத்திற்குத் துன்பமில்லை. இரத்த அழுத்தம் பெருகுவதில்லை. குஷ்டநோய், மலேரியா, வெட்டை நோய், தொய்வு, நீரிழிவு, மூலம், கால் நரம்புத் தடிப்பு, அப் பன்டிஸைடிஸ், மலச்சிக்கல், அசீரணம் முதலியன குணமா கும். மலட்டுத்தன்மையும் நீங்கும். ஊழற்சதையும் குறையும்.

ஆண் பெண்ணின் உடல் மாற்றங்களையும், பாலுணர்ச்சி களையும் கவனிக்கும் 'கோனுட்' சுரப்பி பிட்யூட்டரி தலைமை யில் இயங்குகிறது. சிறுவர்களின் குரல்மாற்றம், மீசைமுளைத் தல், வயது வந்த பெண், பெண்மைக்குரிய அக, புறமாறு தல்களை அடைய இச்சுரப்பியே காரணமாகிறது. இச்சுரப்பி நன்கு வேலை செய்யச் சர்வாங்காசனம் இன்றியமையாதது. குன்று இளமையும், ஓங்கிய ஆயுளும் கிட்டும். இது நோயற்ற ஓர் உன்னத ஆசனம். சர்வாங்காசனம் செய்தால் மத்ஸ்யா சனம் துணையாசனமாகக் கட்டாயமாகச் செய்ய வேண்டும்.

---

குழவி யழுத குரல்கேட்ட தாய்வந்
தழுத கண்ணீர் மாற்றி அமுதூட்டுங்—கெழுதகைபோல்
நாயேன் இடர்களைந்து நல்லருளூட்டும் போநீர்ச்
சேயே நம் தாயாகுந் தேர்.

கோழிப் பதாகையுஞ்சீர்க் கோலமயில் வாகனமும்
ஆழிப் பெருங்குறிஞ்சியார் வேலும்—வாழியெனத்
தோத்திரஞ்செய் போரூரிற் சுந்தரனர் பேரருளோர்
மாத்திரையில் நெஞ்சே வரும். —சிதம்பர சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ வளம் நிறைந்த தம்பலகாமம் கோணேஸ்வரர் ஆலயத்தில் நரபலியிடும் கிரியை முறைகள்

# ஒரு சிவனடியாரின் தரிசனத்தால் அலகு பாய்ச்சுவதாகக் குறைந்தது!

— க. வேலாயுதம்-தம்பலகாமம் —

இரு தொழும்பாளர்களுமே மிகவும் முக்கியமானவர்கள். மற்றவர்களுக்கு பத்தேக்கர், ஐந்தேக்கர், நாலேக்கர், மூன்றேக்கர், இரண்டேக்கர் என்று அவர் அவர் செய்யும் தொழும்புகளுக்கு ஏற்றவிதமாக மானிய வயல்களும் மாதச் சம்பளமும் கோணேஸ்வரர் கோயிலால் வழங்கப்பட்டு வருகின்றன. தொகையான தொழும்பாளர்கள் ஆலயத்தில் தொழும்பாற்றுவதால் ஊழியர்களிடையே பிணக்குகள் ஏற்பட்டால் நடுத்தீர்த்து கோயில் நிர்வாகத்தைக் குறைவின்றி நடத்திச் செல்வதற்கென குளக்கோட்டன் பூபால வன்னிபத்தை திருமலை இராஜ்யத்தின் அரசு கட்டில் ஏற்றினன். அந்த அரச வர்சம் நசிந்து போனதால் பின்வந்தவர்கள் கோயில் நிர்வாக அதிகாரியாக கங்காணம் என்று ஒருவரை நியமித்து உள்ளனர். கங்காணம் என்றால் ஆலயத்தில் நடைபெறும் தொழும்பு வேலைகள் அனைத்தையும் கண்காணித்து மேற்பார்வை செய்பவர் என்பது பொருள். இவருக்கும் மாவடிக்குடா ஈட்டிமுனை என்ற பேர்களையுடைய ஐந்தேக்கர் வயலை கோயில் மானியமாக வழங்கிவருகின்றது. கோயிலில் மாறிமாறிப் பூசை செய்யும் இருபாக முதன்மைக் குருக்கள் மார் வீடுகளில் நிகழும் திருமணம், இறப்பு வீடு போன்றவைகளில் எல்லாத் தொழும்பாளர்களும் ஊழியம் புரியக் கடமைப்பட்டுள்ளனர். அர்ச்சகர்களுக்கு சௌரம் செய்தல், துணி வெளுத்தல் போன்றவைகளைச் செய்பவர்களுக்கும் கோயிலே மானியமாக வயல்களை வழங்கிவருகின்றது. திருவிழாக் காலங்களில் சுவாமி தூக்குவதற்குக்கூட மானிய வயல்கள் வழங்கப்படுவதால் அந்த வயல் மானியம் பெறுபவர்களன்றி மற்றவர்கள் சுவாமி தூக்கப் போகாத ஒரு நிலை இங்குண்டு. இதனால் சுவாமி வெளிவீதி வருவதில் காலதாமதம் ஏற்படுவதும் உண்டு.

## நீர் ஆறுகள் பாய்ந்தோடும் வளமிக்க ஊர்

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்று ஔவைப் பிராட்டியார் கூறியுள்ளார். உண்மையாகவே ஆறின்றி நீர்வளம் குறைந்த ஊர் பாலைவனம் போல் சோபை இழந்து காணப்படும் என்பதில் ஐயமில்லை; இலங்கை ஒரு விவசாய நாடாக இருப்பினும் மக்கள் வதியும் ஊர் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலும் வேளாண்மை செய்யும் இடங்கள் வேறு இடங்களிலும் இருப்பதால் பெரும்பாலான ஊர்கள் ஆற்று வளமின்றி நன்னீருக்குத் தட்டுப்பாடுடையவைகளாக இருத்தலைக் காணலாம். இந்த ஊர்களில் மழைக்காலங்களில் மட்டுமே நன்னீரை எங்கும் காணலாம். மற்றக் காலங்களில் நன்னீரைக் காணவேண்டுமானால் கிணற்றடிக்கோ அல்லது குழாயடிக்கோதான் போயாகவேண்டும். இந்த விதமான தண்ணீர்த் தரித்திர நிலை தம்பலகாமத்தில் இல்லை.

நெல் வயல்களுள் தம்பலகாமம் என்னும் பெயரோடு இருபத்திரெண்டு ஊர்கள். வீதிகளால் தொடர்புற்றுச் சங்கிலித் தொடர்போல் வலமாக வளைந்திருக்கும். இப்பேரூருக்குள்ளால் குறுக்கும் நெடுக்குமாக ஆறுகளும் ஓடைகளும் வாய்க்கால்களும் சலசலத்த ஓசையுடன் ஓடிக் கொண்டிருக்கின்றன. காட்டு வயல்வெளிகளை நீர்ப்பாய்ச்சும் ஆறுகளில் சில ஒரு ஆளைத் தாழ்த்து விடக்கூடிய ஆழமும் அகலமும் உடையன. இந்தப் பெரிய ஆறுகளில் முதலைகள் போன்ற நீர்ப்பிராணிகள் வாசம் செய்கின்றன. தம்பலகாமம் வடக்குத் தெற்குப் பகுதிகளுக்குள்ளால் செல்லும் ஆறுகளில் வெண்பாறு, கோயிலாறு, குடமுட்டி ஆறு போன்றவைகள் பிரதானமானவைகளாகும். வயல்விதைப்பு முடிந்து பயிருக்குக் கங்களவு நீர் கட்டும் காலங்களில் தம்பலகாமத்தில் சிறிது நாள் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவும். அடுத்து அறுவடைக்காலமான ஆவணி புரட்டாதி மாதங்களில் கந்தளாய் நீர்த்தேக்கம் அறப் பூட்டப்பட்டு இருப்பதால் இங்கு தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கும். மற்றக்காலங்களில் தம்பலகாமம் தண்ணீருக்குள் மிதக்கும் வளமுடையது.

## புராணப் பாடல்பெற்ற ஊர்:

தேவாரப் பாடல்பெற்ற மகா தலங்களைப் போல் தம்பலகாமமும் புராணப் பாடல்பெற்ற தெய்வீகம் நிறைந்த ஊர். கோணேஸ்வரத்தின் ஸ்தலபுராணமான திருக்கோணாசலப்புராணம் தம்பை நகர்படலம் என்ற அதிகாரத்தின் மூலம் நூற்றுக்கணக்கான செய்யுள்களால் இந்த ஊரின் தெய்வீகச் சிறப்பையும் நீர்வள நிலவளச் சிறப்பையும் எடுத்துக் கூறுகின்றது. மக்கள் வதியும் இடங்களில் வளவுகளுக்கு எல்லையாகவும் அரணாகவும் வேலிகள்தான் அமைந்திருக்கும். ஆனால் தம்பலகாமத்தில் இந்த வேலிகளுக்குப் பதிலாக வரம்புகள் தான் பிரதானம் வகிக்கும். அவ்வளவு வயல் வளம் செறிந்த ஊர் என்று திருக்கோணாசலப் புராணம் பின்வருமாறு சிலாகித்துக் கூறுகின்றது. ''கன்னல் வேலி வரம்புடுத்த கழனி சூழ்ந்த தம்பை நகர்'' என்று கூறுகின்றது. இன்னொரு பாடல் இந்த ஊரின் வளச்சிறப்பைப் பின்வருமாறு வர்ணிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கரிய குவளை மலர்மேய்ந்து கடைவாயால் அசை போடுகின்ற
எருமை இட்ந்த மூச்செறியும் எழிலார் தம்பை வள நாட்டில்"
என்று கூறுகின்றது.

கோணேஸ்வரத்தையும் அதன் நிர்வாகிப்புக்காக கந்தளாய்க் குளத்தையும் அமைத்த குளக்கோட்டு மன்னனது நோக்கம் மாறாத புனல் பாய வேண்டும்' குளம் என்றும் பூட்டப்படக்கூடாது. தம்பலகாமத்திலுள்ள பெரிய வயல் வெளி தண்ணீர் வளத்துக்குள் கிடந்து பெரு விளைவு விளைந்து கோயில் பூசைக்கருமங்கள் குறைவின்றி நடைபெற வேண்டும் என்ற பெருநோக்குடையவராக இருந்தார் என்பதை கல்வெட்டுப் பாடல் பின்வருமாறு கூறுகின்றது.

"மாறாத புனல் பாயும் திருக்குளமும் வயல்வெளியும் வருந்திச் செய்தே
விளைக என் மரபோர்க்கீயாமல் கோணமலை நிமலர்க்கீந்தேன்"
என்று கூறுவதால் அறியலாம்.

ஆகவே பழமையில் மகாவலி கங்கையில் இருந்து நீர் பெற்று கந்தளாய் நீர்த்தேக்கத்தின் நீர் மாறாத புனலாகத் தம்பலகாமம் வயல்களில் பாய்ந்து கொண்டிருந்தது. அதன் காரணமாகக் கல்த்தரை போல் கடினம் அடைந்து கிடக்கும் களித்தரையினுலான வயல்வெளி நீர் வளத்தால் கூளாகித் தயிர்போல் வளம் செறிந்து கிடந்தது. அவ்வயல்களில் நீரோற்பலம் போன்ற கருங்குவளைகள் படர்ந்து குளத்தில் மலர்ந்திருக்கும். தாமரைப்பூக்களைப்போல் பூத்திருக்கும் வயிறு முட்டிய சேற்றில் தவழ்ந்து அம்மலர்களை மேய்ந்து களைப்படைந்த எருமைகள் களத்து மேட்டில் கரை ஏறிப் படுத்துக் கிடந்து கடைவாயால் அசைபோட்டுக் களைப்புத்தீர மூச்செறியும் வளச் சிறப்புடைய ஊர் என்று மேற்படி புராணச் செய்யுள் தம்பலகாமத்தின் பண்டைய வளச்சிறப்பைச் சிலாகித்துக் கூறுவதைக்காணலாம். வேறு கவிஞர்களும் தம்பலகாமத்தின் வளச் சிறப்பைச் சிலாகித்து பின்வருமாறு கூறியுள்ளனர்.

"சங்கினங்கள் வயிறுளைந்து ஈன்ற முத்தம் தாமரையின் இலைகிடக்கக் கண்டன்னங்கள்
தங்களது முட்டை என்று அடை இட்க்கும் தரை வளமும் நீர் வளமும் நிறைந்த பேரூர்"
என்று ஒரு கவிஞர் கூறுவதைக் காணலாம்.

வளஞ்செறிந்த தம்பலகாமத்து வயல் வெளியிலுள்ள ஒரு தடாகத்தில் வாசம் செய்யும் சங்குகள் வயிறுளைந்து தாமரை இலையில் முத்துக்களை ஈன்றன. இரை தேட ஆகாயத்தில் பறந்து வந்த அன்னங்கள் தாமரை இலையில் தெரியும் முத்துக்களைக் கண்டதும் நேற்று அத்தடாகத்தில் இரை தேடியபோது தாங்கள் இட்ட முட்டைகளோ என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயுற்றுத் தாளப் பறந்துவந்து அந்தத் தாமரை இலையில் கிடக்கும் முத்துக்களை அணைத்து அன்னங்கள் அடை படுக்கும் வளமுடைய நாடு என்று தம்பலகாமத்தின் வளச் சிறப்பைக் கவிஞர் விமர்சிக்கின்றார்.

இன்னொரு புலவர்

"கன்னி இளம் கமுகுகளின் பூவை உண்ணக்கயல் துள்ளி முயற்சி
செய்யும் கழனியெல்லாம்
பொன்னிறத்தில் நெற்கதிர்கள் குலை குலையாய்ப் பூமிநோக்கிச்
சரிந்திருக்கும் புகழ் சேர் நாடு"

என்று கூறுகிறார்.

ஒரு குடியிருப்பு வளவுக்குள் முளைத்துப் பயிராகி அருகேயுள்ள வயலுக்குள் சாய்ந்திருக்கும் இளம் கமுகு ஒன்று பாளை வந்திருந்தது. அந்த வயலுள் வளைய வந்து கொண்டிருந்த விரால் மீன் முத்துச்சரம் போன்ற கமுகம் பாளையைக் கண்டதும் அதை உண்டு ருசிபார்க்கும் பேராசையுடன் வரால் பாளையை நோக்கித் தாம் பிடித்துத் துள்ளிப் பாய்ந்து பாளையை எட்ட முடியாததால் சோர்வுடன் மீண்டும் வயல் நீருள் தொபுக்கென்று வீழ்ந்தது என்று புலவர் தம்பலகாமத்தின் வளச் சிறப்பை எடுத்துக் கூறுவதைக் காணலாம். திருக்கோணேஸ்வரத்தின் விதிமுறை நூல்களான கோணேஸ்வரப்புராணம், கோணேஸ்வரர் கல்வெட்டுப் போன்றவைகளில் கூறி இருப்பதற்கமைய வேள்வி, பொங்கல், மடை, கிராம தேவதைகள் பூசை போன்ற சுற்று ஆராதனைகள் சரிவரச் செய்யப்படாததாலும் கந்தளாய் நீர்த்தேக்க நீரில் கரும்புக்கும் மற்றும் பலவிதமான பங்குகள் கொடுக்கப்பட்டதாலும் அம்பன் கங்கை நீர் குளத்துள் பாய்ந்தும் இக்காலத்தில் தம்பலகாமத்திலும் நீர்த்தட்டுப்பாடு தலைகாட்டத் தொடங்கியுள்ளது என்று மக்கள் கருதுகின்றனர்.

## ஆலய அமைப்புடன் தம்பலகாமச் சரித்திரம் ஆரம்பம்:

எந்த செய்வதானாலும் தமிழர்கள் முதலில் தெய்வ வணக்கம் செய்த பிறகே காரியங்களை ஆரம்பிக்கும் சீலமுடையவர்கள். அதுபோல் தமிழ் உழவர்களின் வாழ்விடமான தம்பலகாமத்தின் சரித்திரமும் ஒரு பெரும் சிவாலய அமைப்புடன் ஆரம்பமாகி இருப்பது குறிப்பிடத்தக்கதேயாகும். தம்பலகாமத்தின் சரித்திரம் இரண்டாயிரத்தைந்நூறு வருடப் பழமை வாய்ந்தது. கலிங்க தேச இளவரசனான விஜயன் கி.மு. ஐந்நூற்றி நாற்பத்தி மூன்றில் இலங்கை வந்தான் என்பது சரித்திரம். விஜய ராஜனின் இலங்கை வரவில் இருந்தே இலங்கைச் சரித்திரம் தொடங்குகிறது. இம்மன்னனின் ஆட்சியின் ஆரம்பகாலத்திலேயே தமிழர்களின் பழம் ஊரான தம்பலகாமத்தின் சரித்திரம் ஆரம்பமாகிவிடுவதைக் காணலாம். இலங்கையின் பூர்வீக ஆட்சியாளர்களான இயக்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகர்களைப் படிப்படியாக வென்று இலங்கை முழுவதற்கும் சக்கரவர்த்தியாக முடிசூடிக் கொண்டதும் முதல் காரியமாக இம்மன்னன் தனது ராஜ்யப் பாதுகாவலுக்காக நாட்டில் நாலா திசையிலும் சிவ முருக ஆலயங்களை அமைத்தான் எனச் சரித்திரம் கூறும். வடதிசையில் கீரிமலைச் சாரலில் அங்கயற்கண்ணி சமேதரான நகுலேஸ்வரர் உறையும் சிவாலயத்தையும், தென் திசையில் தேவேந்திர முனையில் சந்திரசேகரர் ஆலயத்தையும். கிழக்கில் தம்பலகாமத்தில் சிவாலயத்தையும், கதிர்காமத்தில் கந்தவேலுக்கொரு ஆலயத்தையும் அமைத்தான் என மகாவம்சம் இராஜநாயகம் முதலியார் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் போன்ற சரித்திரச்சார்பு நூல்கள் கூறுகின்றன. எனவே விஜயன் இலங்கை வந்து ராஜ்யப் பாதுகாப்புக்காக தம்பலகாமத்தில் கோயில் அமைத்ததுடன் தம்பலகாமத்தில் சரித்திரம் ஆரம்பமாகிவிடுவதைக் காணலாம்.

இரண்டாயிரத்தைந்நூறு வருடப் பழமை உடைய தொல்பதியாம் தம்பலகாமத்தில் விஜயன் அமைத்த ஆலயம் என்னகாரணத்தாலோ அழிவுற்று பல நூற்றுண்டுகள் சென்றதின் பின் பறங்கியர்களால் திருமலைக் கோணேஸ்வரம் அழிக்கப்பட்ட போது பக்தர்களால் அங்கிருந்து கொண்டுவரப்பட்ட மூர்த்திக்காக இறைவன் கனவில் தோன்றி இட்ட ஆக்ஞைக்கமைய ஜெயதுங்கவரராஜன் என்னும் செங்கடக நாட்டு மன்னனுல் இற்றைக்குச் சுமார் முன்னூற்றி ஐம்பது வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட கோயிலே இன்றிருக்கும் கோணேஸ்வரம் என அறியப்படுகின்றது. சரித்திர தொடக்க காலத்தில் இருந்தே தம்பலகாமம் கோயில் குடியிருப்பில் சிவாலயங்களும் சிவ வழிபாடும் நிலை பெற்று வந்திருப்பதால் பழமை வாய்ந்த இப்பதி ஸ்தலப் பெருமை உடையது. ஆகவே தம்பலகாமம் கோணேஸ்வரம் மூர்த்திச் சிறப்பும் ஸ்தலப்பெருமையும் உடையது என்று கூறலாகும்.

---

**வேல் கொடுத்தாய் திருச்செந்தூரர்க்குக் கம்மியின்மீது வைக்கக்
கால் கொடுத்தாய் நின் மணவாளனுக்குக் கவுணியர்க்குப்
பால் கொடுத்தாய் மதவேளுக்கு மூவர்பயப்படச் செங்
கோல் கொடுத்தாய் அம்மையே எனக்கு ஏதும் கொடுத்திலையே**

—படிக்காசுப்புலவர்

**கையாலுனைத் தொழச் சென்னியினுலுன் கழல் வணங்க
மெய்யா யடிக்கடி வாக்காற்றுதிக்க விதித்து மனம்
நையா வியற்கைய நல்கினி யென்னை நழுவவிடேல்
ஐயா வுனக்க பயம்பழ னுபுரி யாண்டவனே!**

—மாம்பழக்கவிச்சிங்கநாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதரின் உணவு மாமிசமா மரக்கறியா?

— மாத்தளை — அருணேசர் —

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## மனிதன் மனிதனா? அரக்கனா?

அந்தோ! நமக்கு யாதொரு தீமையுஞ் செய்யாத அந்த எளிய உயிர்களை ஏனோ இந்த மனிதர்கள் மனிதராய்ப் பிறந்தும் இவ்விதம் கொடிய அரக்கர்கள் போலக் கொலை புரிய வேண்டும்? அவ்வுயிரினங்கள் தங்களுக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட பசும் புல்லையும் தழையையும் தண்ணீரையும் அருந்திவிட்டுச் சும்மாவன்றோ திரிகின்றன.

நாம் எவ்வளவு வேலை வாங்கினாலும் அவை நம்மிடம் கோபம் கொள்ளாமல் உழைக்கின்றன. அவற்றால் நாம் எவ்வளவோ நன்மைகளைப் பெறுகின்றோம். அவை நம் உடல் வலிமைக்கு மிகுதியான சத்தடங்கிய நெய், பால், தயிர் முதலிய உணவுகளையும், வயல்களுக்கு வேண்டிய எருவையும் தருகின்றன; தாயற்ற பிள்ளைகளை வளர்ப்பது அவற்றின் பாலினாலல்லவா?

நாம் உடுப்பதும், போர்ப்பதும் அவற்றின் கம்பளம் தானே? அவை நமக்கு நல்ல வாகனமாகவும் உதவுகின்றன.

இவ்வளவு நன்மைகளைத் தரும் அப்பிராணிகளைச் சிறிதும் நன்றியில்லாமல் தங்கள் நாக்கு ருசிக்காகச் சுவாமி பேரைச் சொல்லிக்கொண்டு அவற்றை தாயலறப் பிள்ளையையும், பிள்ளை அலறத் தாயையுமாகப் பிடித்து எள்ளளவும் இரக்கமின்றிக் கழுத்தை அறுப்பது என்ன கோரம்! எத்துணை கொடுமை! திருவிழா வந்தாலும், பிள்ளை பிறந்தாலும், பிறக்காவிட்டாலும், பொங்கல் வந்தாலும், புதுமை வந்தாலும், இழவு வந்தாலும், கலியாணம் வந்தாலும், படைப்பு வந்தாலும், பதறி விழுந்தாலும் அவ்வேழை உயிர்களின் கழுத்துக்கன்றோ கத்தி கொண்டுவருகிறார்கள்!

## அததன் உயிர் அததற்கு இனிமையாயிராதா?

எந்த உயிரும் எவ்வகைச் சன்மமெடுத்த போதிலும் அததற்கு அததன் உயிரின் மேல் மிகப் பிரியமே என்பதை அரக்கர் மனதுள்ள மனிதர்கள் ஏனோ உணர்கின்றனரில்லை. ஒருவன் கழுதையை மிக அலட்சியமான பிராணி எனக் கருதுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் மனிதனுக்குத் தன் உயிர் எவ்வளவு இனிமையாய் — சர்க்கரையாய்த் தோற்றுகிறதோ அதுபோலவே கழுதைக்கும் அதன் உயிர் அவ்வளவு இனிமையாக தோன்றும் என்பதில் என்ன சந்தேகம்? இதற்குச் சான்றாக அடியில் வரும் பெரியோர் மொழிகளையும் உணர்க:-

**"தாகப்படும் பொருளினும் மகன் பிரியமாம்**
**ஆகத்திலும் பிரியம் இந்திரியமாம் கரண**
**மதனிலும் பிரிய முயிராம்"** (தாண்டவ மூர்த்தி சுவாமிகள்)

**"யானேதும் பிறப்பஞ்சேன்**
**இறப்பதனுக் கென் கடவேன்"** (மணிவாசகர்)

கடவுள் பக்தி என்ற ஆசையைத் தவிர மற்ற எவ்வித ஆசையும் இல்லாத பெருந் துறவியாகிய வாதவூரடிகளே இவ்விதம் "இறப்பதனுக் கென் கடவேன்" என மரண துன்பத்தை நினைத்து உளம் மிகக் குழைந்தாரெனின், பேரிருளில் சிக்குண்டு ஆசாபாசக் கடலுள் ஆழ்ந்து உழலும் ஏனைய உயிர்கள் உடல் விடுவதற்கஞ்சி அடைகின்ற துயரத்தை அறிந்துரைக்கக் கூடுமோ?

## மனித உயிர் மாத்திரம் வல்லுயிர் மற்ற உயிர்கள் புல்லுயிரோ?

மனித உயிர் மாத்திரம் வல்லுயிரென்றும், மற்ற உயிர்கள் புல்லுயி ரென்றும் சிலர் நினைக்கின்றனர். ஒருவனுடைய காலையோ கையை யோ மற்றொருவன் வெட்டிவிட்டால் அவன் எவ்வளவு துன்பத்துடன் புரண்டு புரண்டு அழுவான்? மூர்ச்சிப்பான்? கைகால்களை வெட்ட வேண்டியதில்லை; அவனுக்கு ஒரு சிறிய முள் தன் காலில் பட்டுவிட்டுடும், அவன் எவ்வளவு துன்பமும், துயரமும், பிரயாசமும் படுவான்?

**"முட்குத்தி நொந்தறியாரோ பிறவுயிர்**
**உட்குத்தி ஊன் தின்பவர்"**

என்பதற்கிணங்க, முள் குத்தியதாலேயே தனக்கு அவ்வளவு நோவுதல் இருந்ததை அறிந்திருந்தும், அதைப் போலவேதான் மற்ற உயிர்களின் கழுத்தை வெட்டும் போதும் அவற்றிற்குத் தன்னைவிட அதிகமாகவே வேதனையுண்டாகுமென்று ஏனோ அவன் எண்ணிப் பார்ப்பதில்லை!

பிற உயிரைக் கோபித்தல், துன்புறுத்தல், கொல்லுதல் செய்ய மனமெழும் போது அவ்வெழுச்சியை மீற விடாது அறிவினால் தடுத்து. பிறவுயிர்கள் தன்னிடம் அங்ஙனஞ் செய்ய முயலும் போது தனக்கெவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறு இருந்ததென்பதைச் சிந்தித்துப் பார்த்தால் இப்படி கழுத்தை அறுக்க மனமெழுமோ'

ஒருவேளை இவர்கள் மிருக பிராணிகளுக்குச் சுகதுக்கமென்பதே இருக்காதென்று நினைக்கலாம். அப்படியானால், கொலையாளி பிடிக்கப் போகும் போது அவை ஓடுகின்றன; கத்துகின்றன; கதறுகின்றன; தத்தித்தத்தி விழுகின்றன; மயங்குகின்றன. இன்னும் என்னென்னவோ பாடுகளெல்லாம் படுகின்றன.

இவ்வுணர்ச்சிகளெல்லாம் அவற்றிற்குச் சுகதுக்கமில்லாமல் எப்படி உண்டாகின்றன; இதனால் அவற்றிற்கும் சுகதுக்க உணர்ச்சி உண்டென்பது விளங்கவில்லையா? இதைவிட அவை வேறென்னதான் செய்ய முடியும்?

ஒரு மனிதனுக்கு ஒரு துன்பம் நேர்ந்தால் மற்றவரிடம் கூறுவான்; அவர்கள் அதைத்தீர்க்க முயலுவார்கள். பலவிதமான பரிகாரங்கள் ஏற்படுத்தப்படும். மிருக பிராணிகளோ? என்ன துன்பம் நேரிட்டாலும் வாய்விட்டுச் சொல்ல முடியாமல் மௌனமாய்ச் சகித்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது!

அவைகள் உயிர்விடும்போது கதறியும், புரண்டும், துடித்தும் துன்பப்படுவதைக் காணும் எவர் மனந்தான் இளகாது? மிருக பாஷை தெரிந்த எவருக்கும் அவைகளின் பரிதாபப் புலம்பலைக் கேட்டால் எவ்வித கல்மனதேயானாலும் அதன் பின்பு கொலை செய்ய மனந்துணியுமா?

அவைகள் அழுது அலறிப் புலம்பும் போது, ''ஐயோ! எங்களைக் கொன்று உண்ணும் பெரியோர்களே! எங்களுக்கும் பெண்டு பிள்ளைகள் இனத்தார்கள் உண்டல்லவா? உங்களைப்போல் வாய்பேச மாட்டாத ஒரு வித்தியாசம் மாத்திரம் எங்களுக்கு உண்டு. ''எங்களை மாத்திரம் கழுத்தை அறுத்து பக்குவமாய்ச் சமைத்து உண்கலத்தில் வைத்து உண்ணலாமா? இது நீதியாகுமா?'' என்று அபயக் குரலிட்டன்றோ கத்துகின்றன இதற்கு மன முருகாதவரும் மனிதப் பிறப்பில் பிறந்தவராவரோ? அபயமிட்டு அடைக்கலம் புகுந்தோரை ஆதரிப்பதன்றோ மனிதத்தன்மை.

கருணைக்கடவுளான கடவுள் மனிதனை மனிதனாக, நல்ல குலத்திலே குருடு செவிடு, நொண்டி முடமில்லாமல் பிறக்க அருள் புரிந்திருப்பதேன்? மிருகங்களைப் போல் யாதொரு நற்கருமமும் இயற்றாமல் உண்டு உறங்கிக் காலம் கடத்த அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு அவர் இரண்டு கண்களைக் கொடுத்திருப்பதேன்? கைகளில்லாத சிறிய பிராணிகளைக் கத்தியை எடுத்துக் கழுத்தை அறுப்பதற்கும் அவற்றின் சதையை எடுத்துத் தின்பதற்காகவும் அல்ல: ஏன் பேசும் சக்தி வாய்ந்த அகன்ற வாயைக் கொடுத்திருக்கிறார்? கறுமுறு என்று ஆட்டுக்கறியைத் தின்பதற்கும் கோழியின் இரத்தத்தை உறிஞ்சுவதற்கும் அல்ல.

வேறெதற்காக இந்த அவயங்களை அருளியிருக்கிறார்? எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாராட்டி அவற்றிற்கு உதவி புரியவும், அவற்றை வெட்டப் போகிறவனை வெட்டாதே என்று தடுப்பதற்கும், கொல்லாதே என்று போதிப்பதற்குமே இம்மானிட உடலத்தை அருளியிருக்கிறார்.

அவ்விதமிருக்க அந்தோ! நாற்கால் விலங்குகளைத் தின்ன இருகால் விலங்குகள் செய்யும் பாதகத்தை என்னென்றுதானுரைப்பது! பரிதாபம்! பரிதாபம்!! நினைத்தாலே நெஞ்சம் திடுக்கிடுகிறது! இதனாலன்றோ

"வேறொன்றை யொருவர் கொல்லினன் நேரம்
ஐயோவென்
முகம் வாடி நிற்பதுவும் ஐயநின்னருளறியுமே"
"எவ்வுயிர்த்திரளு முலகி லென்னுயிரெனக்
குழைந்துருகி நன்மையாய்"

என்று தாயுமான சுவாமிகளும் பரிதவித்துப் பாடினார்.

மகாத்மா காந்தியடிகளும் "மனிதனுடைய உயிரைவிட ஆட்டுக்குட்டியின் உயிர் எவ்வகையிலும் தாழ்ந்ததன்று என்பது என்கருத்து மனித உடலுக்காக ஆட்டுக்குட்டியின் உயிரை வாங்க நான் ஒரு நாளும் சம்மதியேன். ஓர் பிராணி எவ்வளவுக்கு ஆதரவற்றதாயிருக்கிறதோ அவ்வளவுக்கு அதைக் கொடுமையிலிருந்து காப்பாற்றும் பொறுப்பு மனிதனுக்கு ஏற்படுகிறதென்பது என் கொள்கை. ஆனால் அத்தகைய தொண்டுக்குத் தன்னைத் தகுதி செய்துகொள்ள மனிதன் அப்பாதுகாப்பை அளிக்க இயலாது" என்று கூறியுள்ளார்.

(தொடரும்)

அஞ்ஞான வல்லிருள்போய் அன்பர்துளக் குன்றின்மிசை
மெய்ஞ்ஞான பானுவெளி தோன்றச்—செஞ்ஞான
நாதத்தொனி கூவும் நற்கொடிச் சேவற்போரூரன் இரு
பாதத்தை நெஞ்சே பணி.

—சிதம்பர சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி

—ஸ்ரீ கே. அன்னதானம்·புதுடெல்லி

அன்புள்ள பக்தன் தன்னை ஈஸ்வரனிடம் அர்ப்பணிக்கிறான். கடவுளைத்தவிர வேறு ஒன்றையும் வேண்டுவதில்லை. பரம்பொருளோடு ஒன்றுவதான மோக்ஷமும் வேண்டுவதில்லை.

ஸாதகன் கடவுளை அன்புடன் பூஜிக்கும் போது சரீரத்தில் மயிர்க்கூச்சலெடுக்கின்றது. மனத்தில் ஆனந்தம் நிரம்பியிருக்கின்றது. கண்ணில் ஆனந்தக் கண்ணீர் வடிகின்றது. பக்தன் ஆனந்தத்தில் கூத்தாடுவான். கடவுளைப் பற்றிய நினைவில் முழுவதும் ஆழ்ந்திருப்பான். அவன் ஆசைகள் ஒழிந்துவிடும். எப்பொழுதும் ஆனந்தத்திலேயே மூழ்கியிருப்பான். மோக்ஷத்திற்கோ, ஞானத்திற்கோ, உலக ஐஸ்வர்யத்திற்கோ, ஸுகத்திற்கோ, பெருமைக்கோ, அதிபய சக்திகளுக்கோ அவன் வேண்டுவதில்லை. பிறரிடம் விரோதமோ, எந்த ஒரு பொருளிலும் வெறுப்போ அவனுக்கு கிடையாது. எப்பொழுதும் ஆனந்தம் அனுபவிக்கிறான். ஒவ்வொரு பிராணியிலும் கடவுளைப் பார்க்கிறான். அவன் அன்பு பித்தனாக இருக்கிறான். உலக விஷயங்களிலோ சுகங்களிலோ அவன் ஆர்வம் காட்டுவதில்லை. பக்தன் இரவும் பகலும் ஈஸ்வரனின் மஹிமைகளை பாடுவதில் ஈடுபட்டிருப்பான். உலகில் பற்றில்லாமல் நடமாடுகிறான். சிரிப்பான், சிலசமயம் அழுவான், கத்துவான், உரக்கப் பாடுவான், ஆடுவான். ஆத்மாவில் சந்தோஷித்து மனமும் சரீரமும் வேலை செய்யாமல் ஓய்ந்துவிடும். பக்தன் தான் தனியாயிருக்கும் எண்ணத்தை மறந்துவிடுகிறான்.

பக்தி நிறைந்த அன்பின் அடையாளம் தானாகவே எல்லா காரியங்களையும் துறந்துவிடுவதே. அவனுக்கு பூதங்களைப்பற்றியோ, பிசாசுகளைப் பற்றியோ பயமில்லை. கடவுளிடம் மனதை செலுத்தி, பைத்தியம் பிடித்தவன்போல் நடப்பான் கடவுளிடம் சரணடைந்து அவரை கதியாக அடைவான்.

கடவுளிடம் பக்தி ஏற்படுவது மனதாலும், வாக்காலும், சரீரத்தாலும் கடவுளுக்கு உகந்த காரியத்தைச் செய்வதால் ஆகும். இது பற்றில்லாமலும். பலனை எதிர்பாராமலும், கடவுளுக்குப் பிரியமில்லாத காரியத்தைச் செய்யாமலும், உகந்த காரியங்களைச் செய்தலும் ஆகும். பக்தி முதிர்ந்தால் மத சம்பந்தமான காரியங்களும், உலக காரியங்களும் தானாகவே நின்றுவிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி என்பது கடவுளை பூஜித்தலில் ஈடுபடுவதாகும். அது வெளியாகவோ, அந்தரங்கமாகவோ, மானஸிகமாகவோ இருக்கலாம். சிலர் பகவன் நாமத்தை பாடுவதிலும் கேட்பதிலும், ஈசனின் மஹிமைகளையும் குணங்களையும் சொல்வதிலும் கேட்பதிலும் விருப்பமுள்ளவர்களாயிருப்பார்கள். இதுவே விரதங்களால் அடையப்படுவது. பக்தன் பெருமை, தாழ்மை, லாபம், நஷ்டம், ஜயம், அபஜயம், ஸுகம், துக்கம் இவைகளைப்பற்றி கவலைப்படுவதில்லை. சமமாகப் பார்ப்பான். அவன் பக்தியோடும் அன்போடும் கடவுளிடம் தன்னை முற்றிலும் அர்ப்பணித்துவிட்டால், கடவுளை தனக்கு முற்றிலும் பிரியமானதாகவும், சிறந்த புகலிடமாகவும், தன் முக்ய லக்ஷ்யமாகவும் கருதுகிறான். பக்தனுக்கு உலகில் ஆசையில்லை. அமைதியுள்ளவன். எல்லாப் பொருள்களிலும் சமமாக கடவுளை பார்ப்பவன். பக்தன் அன்புப் பாதையில் முன்னேறுகிறான். உலக ஸுக விஷயங்களில் முற்றிலும் வைராக்யமடைந்தவன். உலக பற்றில்லாமலும், முற்றிலும் சரணமடைந்ததாயுமுள்ள அன்பு கடவுள் ஒருவரிடத்தில்தான் ஏற்படமுடியும். அன்புக்கு பாத்திரமாக கடவுளை அறிந்தவர்களுடைய ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. அதை வர்ணிக்க முடியாது.

கடவுளிடம் பக்திகொள்ள வகைகள் பல. க்ஷேத்ராடனம், ஸமம், தமம் முதலிய நியமங்கள், மன அடக்கம், பிறரிடம் தயைகொள்வது, குரு, பிராமணர்களுக்கு சிஸ்ருஷை புரிவது, அடக்கத்துடன் வித்தை கற்பது முதலியன கடவுளிடம் பக்திகொள்வது.

## இவைகளின் முடிவு:

அடக்கம்; கர்வம் அஹங்காரமில்லாமலிருப்பது. நான் காரியம் செய்கிறேன் என்ற எண்ணம் இல்லாமலிருப்பது, எல்லாம் கடவுளே. நடப்பதெல்லாம் அவர் சுத்த சக்தியால்தான் என்ற தீவிரமான நம்பிக்கையையும் குறிக்கின்றது. பக்திக்கு அடிப்படையாக கடவுள் ஸர்வ சக்திமான், ஸர்வ ஞானவான், உலகத்தின் ஆத்மா, என்ற அறிவு வேண்டும்.

ஞானத்திலிருந்து நம்பிக்கையும், நம்பிக்கையிலிருந்து கடவுளிடம் அன்பும் ஏற்படுகிறது. கடவுளிடம் அன்போடு இருப்பதால் பக்தி நிலைக்கிறது. கடவுளைப்பற்றிய உண்மையும் அறியப்படுகிறது.

பகவானை ஜபத்தாலும், நாம சங்கீர்த்தனத்தாலும் வழிபடுவது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்து பாவங்களை தவிர்க்க வேண்டும்

அவையாவன:

1. ஸாதுக்களையும், மஹான்களையும் தூஷிப்பது.
2. கடவுளின் பல பெயர்களில் வித்தியாசம் காட்டுவது.
3. குருவை தூசிப்பது.
4. வேத ஸாஸ்திரங்களை தூஷிப்பது.
5. சாஸ்திரங்களில் சொல்லியுள்ள நாம சக்தியை அனாவசியமாகச் சொல்லப்பட்ட புகழ் என்பது.
6. கடவுளின் பெயரில் பாபம் செய்வது.
7. கடவுளின் நாமத்தைச் சொல்லுவதால் வரும் புண்ணியத்தை, மற்றதானம், யாகம், விரதம், முதலியவைகளிலிருந்து வரும் புண்ணியத்தோடு ஒப்பிடுதல்.
8. மதிக்காத, இஷ்டமில்லாதவர்களை நாம ஜெபம் பண்ண புத்தி கூறுவது.
9. நாமத்தின் மஹிமை தெரிந்த பிறகும், அதை ஏற்காமலிருப்பது.
10. கர்வம், உலக மயக்கம் சுக விஷயத்தில் ஈடு படுவது. பக்தியை விருத்திபண்ணுவதன் முக்கியத்தையும் சக்தியையும் நாம் அறியவேண்டும். எல்லா காரியங்களும் ஒருவனை உண்மையான பக்தியுள்ளவனாகச் செய்ய வேண்டும்.

நாம் கூடி வீண் வார்த்தைகள் பேசி உபயோகமில்லாத, ஆத்மீக சம்பந்தமில்லாத விஷயங்களைப் பேசி நாம் கடவுளிடம் நம் கடமையைச் செய்ததாக நினைக்கக் கூடாது.

பக்தி பெரியவர்கள் அனுக்ரஹத்தாலும், ஈஸ்வரன் கருணையாலும் பெறப்படுவது: ஸத்ஸங்கத்தாலும், கருணை வெள்ளமான மஹான்களை அண்டுவதாலும் பகவத் கருணையை நிச்சயமாக அடையலாம். பகவத் கருணை பக்தியினால் ஏற்படும் பயனே. அது திவிரமான பக்தியாலும், கடவுளிடம் சரணடைவதாலும் ஏற்படும். பகவத் கருணையின் சக்தி பக்தனின் ஹிருதயத்தில் அதிகரிக்கின்றது.

பக்தன் ஒரு சத்குருவை அடையவேண்டும். அந்த சத்குரு ஆசாரமுள்ளவராகவும், நல்ல நடத்தை, சுத்தம், தெய்வ குணங்கள், தெய்வ அன்பு உள்ளவராகவும் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட மகாத்மாவின் ஸங்கத்தால் மனத் தூய்மை, பாபங்கள் நசிப்பது, பக்தனை தூயவனாக ஆக்குவது முதலியவை ஏற்படும்.

மஹாத்மாக்கள் தூரத்தில் நாம் போக முடியாத இடங்களில் இருக்கின்றார்கள். முதிர்ந்த சிஷ்யர்களிடம் அவர்கள் தொடர்பு வைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுகிறார்கள். அவர்களிடமிருந்து வரும் நுட்பமான அலைகள் சிஷ்யனை புனிதப்படுத்துகின்றன. முமுக்ஷுவானவன் தன் ஹ்ருதயத்தில் மறைந்து இருக்கும் ஆத்மா (கடவுள்) வுடன் தொடர்புகொள்ள வேண்டும்.

முதலில், முன்னேற விரும்புபவன் தகுதியை அடைய வேண்டும். சுத்தமான உயர்ந்த பக்தியை அடைய ஆசை ஏற்படும்போது, அவன் இருதயம் அதை அடைய துடிக்கிறது. அவன் அழுகை குரல் கடவுளை எட்டி, அந்த அந்தர்யாமி ஒரு தகுந்த குருவை சிஷ்யனிடம் அனுப்புகிறார். இந்த பெரியவர்களின் ஸ்வபாவம் பிறர்கஷ்டங்களைத் தாமாகவே சென்று நீக்குவதே.

ஒருவன் மனதில் நன்றாக வைத்துக்கொள்ள வேண்டிய விஷயம், அந்தராத்மாவோடு ஒன்றாக கலப்பதே என்பது. ஆத்மஞானம் பெற்றவரின் ஆத்மா பரமாத்மாவோடு சேருவதே, ஞானம் பெற்றதின் அடையாளம். பக்தி ஏற்படுவதற்கு ஸாதகன் இருதயத்தில் மறைந்திருக்கும் ஒரே உண்மை வஸ்துவை எப்பொழுதும் தியானிப்பதே வழி.

துஷ்டர்கள் ஸகவாஸத்தை நீக்கு, கெட்ட எண்ணங்களையும் அகற்று. கீழே சொல்லப்பட்ட பத்து காரணங்கள் மனிதனின் நல்ல கெட்ட குணங்களை ஏற்படுத்துகின்றன:

(1) இருப்பிடம் (2) ஆகாரம் (3) ஜலம் (4) குடும்பம்
(5) சுற்றுபுறம் (6) இருக்குமிடத்தின் நிலமை
(7) ஸாஸ்திர படிப்பு (8) விவாதிக்கும் விஷயங்கள்
(9) வேலை (10) பூஜை செய்யும் வழி.

இவைகள் எல்லாம் ஸாத்வீககுணமுள்ளவைகளாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் முமுக்ஷு சுத்தமாயும் சத்துடன் நல்ல குணத்தோடும் விருத்தி அடைய முடியும். விவேகம் அல்லது புத்திதான் நமக்கு வழிகாட்டும். அதனால் நாம் சரியானதை தப்பானதிலிருந்தும், நல்லதை கெட்டதிலிருந்தும், உண்மையை பொய்யிலிருந்தும் பிரித்து அறியமுடியும்.

எல்லா சந்தர்ப்பங்களிலும் நாம் மன அமைதியுடன் இருக்கவேண்டும். ஏனென்றால் ஆசை நிறைவேறாவிட்டால் கோபம் உண்டாகும். கோபத்திலிருந்து விவேகமின்மை, நல்லது, கெட்டது என்ற அறிவு இல்லாதிருத்தல் ஏற்படும். மறதி காரிய காரணத்தை நிச்சயிக்கும் ஸக்தி ஏற்படும். அது நம்மை நல்வழியிலிருந்து விலகச் செய்து அழிவைத்தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடர்கள் உள்ளிருக்கும் ஆத்மாவை அறியாமலிருப்பது மாயை என்னும் ஒரு திரை மனதிலிருப்பதால்தான். இதை மூன்று வழிகளில் அகற்றுவது அவசியமாகும். அவை பற்றில்லாமலிருப்பது, பெரியோர்க ளுக்கு பணிவிடை செய்வது, எதையும் தன்னுடையதல்ல என்று நினைப் பது. தான் கடவுளின் ஒரு கருவி என்று நினைக்கவேண்டும். கடவுளுக்காக தான் வேலை செய்வதாக எண்ணவேண்டும். இப்படி கடவுளிடம் தன் மனம், புத்தியை முழுவதும் ஒப்படைத்தல் வேண்டும். அப்பொழுது கட வுள் பக்தனின் அஹங்காரத்தைப் போக்கி, அவன் ஹிருதயத்தில் இருந்துகொண்டு அவன் மூலமாக வேலை செய்ய ஆரம்பிக்கிறார். முந்திய ஜன்மங்களில் செய்த கர்மாக்களால் தடை ஏற்படலாம். அவைகள் முடிந்த பிறகு அவன் உண்மை பக்தனுகிறான்.

ஆகையால் எல்லோருமே கடவுளிடம் உண்மையான பக்திகொள்ள முடியும். இந்த நுட்பமான, உண்மையான கடவுளிடம் அன்பு குணங் களுக்கும், உலக இச்சைகளுக்கும் மேற்பட்டது, விருத்தியாகிக்கொண் டேயிருப்பது, தடைவிடாமல் பாய்வது, மனிதனின் நுட்பமான பிர தேசங்களில் இருப்பது, முக்கியமாக அனுபவமாகவே இருப்பது, அன்புமேல் மேல் வளரும், குறைவதில்லை. தன்னலமில்லாதது. பகவா னைப் பார்ப்பதைத் தவிர வேறு எண்ணம் கிடையாது.

ஒரு பக்தன் கடவுளிடம் அன்பின் தீவிரத்தை இப்படி சொல்லு கிறார்.

"ஹரியை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது மனம் திருடப் பட்டது. இப்பொழுது ஹரி மட்டும் தான் எல்லாப்பக்கங்களிலும் பார்க்கப்படுவது.

பக்தனின் இருதயம் கடவுளிடம் அன்பு என்பதன் வடிவமாகவே மாறிவிட்டது. ப்ரும்மானந்தத்தை அடைகின்றது. ஆகவே பக்திகார ணமில்லாத ஞானியும் அன்பாகும். இதனுல் கடவுளிடம் சீக்கிரம் சேரலாம். எப்பொழுதும் கடவுளையே தியானித்துக்கொண்டு பூரண மன அமைதி அடையலாம். பக்தன் தன் காரியங்களை பகவானிடம் அற்பித்துவிடுதலால், அவனிடம் ஒரு கெட்ட குணமிருக்காது. கடவுளை நினைப்பதும், தியானிப்பதும் தானிருந்து கொண்டு, கடவுள் அனுபவம் கிட்டும்.

பக்தியை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. ஏனென்றால் அது சாந்தியும் அத்யானந்தமும் ஆன ஒரு அனுபவம். எல்லாவற்றையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு பக்தன் ஆனந்த மிகுதியால் உலகை கவனிக்காமல் கத்துகிறான், ஆடுகிறான், பாடுகிறான், மூர்ச்சை யாகி கீழே விழுகிறான். தன் தேகத்தை மறந்துவிடுகிறான். இப்படியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த அனுபவத்தில் மீண்டும் மீண்டும் அனுபவம் ஒன்றேதான் அவ னுடைய ஸ்திதி. எல்லாவற்றையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்து விட்டு பக்தன் ஆனந்த மிகுதியில் உலகை கவனியாமல் கத்துகிறான். உண்மையாக சுத்த பக்தி இருக்குமானால் கோபம், பயம், ஆசை முதலி யவை இருக்காது. பக்தன் சுத்தமான ஆனந்தத்தில் மூழ்கியிருப்பான்.

பக்தியினால் பக்தன் முக்தியடைகிறான். முக்தியின் ஐந்து வகைகள் கீழ் வருவன:-

1. ஸாலோக்யம் — ஹரியின் வாஸஸ்தானத்திலிருப்பது.
2. ஸாமீப்யம் — பகவான் பக்கத்திலிருப்பது.
3. ஸார்ஷ்டி — பகவானுக்கு உள்ள சக்திகளை பெறுவது.
4. ஸாரூப்ய — ஹரியின் ரூபம்போல் ரூபம் அடைவது.
5. ஸாயுஜ்ய — கடவுளோடு ஒன்றாக கலப்பது.

பாகவத புராணத்தில் பகவானே சொல்லுகிறார்: "எந்த பக்தனு டைய குரல் அனுபவத்தில் தடைப்படுகிறதோ, அன்பினால் ஹிருதயம் உருகுகிறதோ, எவன் மறுபடியும் மறுபடியும் அழுகிறானோ, மேலும், சில சமயம் சிரிக்கிறான், பயமில்லாமல் பாடுகிறானோ, ஆடுகிறானோ அந்த பக் தன் உலகத்தை தூய்மைப்படுத்துகிறான்."

கடவுளிடம் பக்தியேற்பட கீழே சொல்லப்பட்டவை முக்ய சாத னங்களாகும்:-

1. வேத ஸாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களை சரியாக அனுஷ்டிப்பது, வைராக்கியத்துடன் இருப்பது, அதனால் கடவு ளின் அன்பை சம்பாதித்து, நல்ல வழியில் சம்பாதித்து ஜீவனம் செய்வது, யாகம், தானம், விரதம் ஸாஸ்திரத்தில் சொல்லிய படி செய்வது.
2. ஸதாசாரம் அனுஷ்ட்டிப்பது-நன்நடத்தை
3. ஸத் ஸங்கத்தில் கலந்துகொள்வது, பகவானின் மஹிமையை கேட்பது, பாடுவது, அதை தியானம் செய்வது.
4. பகவந் நாமத்தை ஜபிப்பது.
5. பகவானை ஆராதித்து, வணங்குவது, பிரார்த்திப்பது.
6. மஹாத்மாக்களுக்கு சேவை செய்வது.
7. க்ஷேத்திரங்களில் வசிப்பது.
8. தயையும், உதவியும், மனம், சரீரம், பணத்தால் முடிந்த அளவு செய்வது.
9. எல்லா கர்மாக்களையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்வது.
10. எல்லாப் பிராணிகளிலும் கடவுளைப் பார்ப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ப்ரபுத்தயோகி சொல்லியபடி கீழ்கண்டவைகளை அனுஷ்டானம் செய்ய வேண்டும்—உயர்ந்த பயனை அடைய விரும்பியவன் ஒருகுருவிடம் செல்ல வேண்டும். அந்தகுருவேதம் படித்தவராயிருக்க வேண்டும். மன அமைதிபெற்றவராய் பிரம்மத்தில் மனதைநிறுத்தியவராய் இருக்க வேண்டும். குருவை ஆத்மாவென்றும் கடவுளென்றும் பாவித்து, அவரிடமிருந்து, அவருக்கு உண்மையான சேவைசெய்து, பாகவதர்களுடைய குணங்களை தெரிந்துகொள்ள வேண்டும். இதனுல் பரமாத்மாவான ஹரியானவர் தன்னையே பக்தனுக்கு அளிக்கிறுர், சந்தோஷப்படுகிறுர். விஷயங்களில் விரக்திவேண்டும். ஆனுல் மஹாத்மாக்கள், சாதுக்கள் இவர்கள் சங்கத்தை விரும்ப வேண்டும். தயை, சிநேகத்தன்மை பணிவு மற்றவர்களிடம் காட்ட வேண்டும். மனத்திலும் சரீரத்திலும் சுத்தமாக இருந்து, ஸாஸ்திரங்களில் சொல்லிய கர்மங்களை செய்து, எல்லா நல்ல குணங்களையும் அர்ப்பணித்து, தனிமையில் இருந்து, ஆகாரம் மிதமாக உண்டு, மனம் சரீரத்தையும் அடக்கி ஆளவேண்டும். ஜபம், தியானம் செய்ய வேண்டும். பக்தியுடன் பக்திக்கு அவசியமான புறத்தூய்மை, உள்தூய்மை அனுசரிக்கவேண்டும்.

புறத்தூய்மை:- உடம்பை சுத்தமாக வைத்துக்கொள். உண்மையான வழியில் பணம் சம்பாதித்துக்கொள். கடவுளுக்கு அன்னத்தை நிவேதனம் செய்து அதை சுத்தமாக்கு. நடத்தை சுத்தம் வேண்டும். பிறரிடம் அன்பு வேண்டும். அதிதிகளை ஆதரித்து வீட்டை சுத்தமாக்கு. பகவன் நாமத்தை சொல். ஸாஸ்திர விதிகளை அனுசரி.

அகத்தூய்மை:- மனது சுத்தம் வேண்டும். கெட்ட குணங்களான பொய், த்வேஷம், கர்வம், பற்று, பொருமை, வெறுப்பு, துக்கம், பாப எண்ணங்கள், அர்த்தமற்ற உலக எண்ணங்கள் இவைகள் இருக்கக் கூடாது.

அவைகளுக்கு பதிலாக எளிமை, அன்பு, பணிவு, வைராக்கியம், த்வேஷமில்லாமை, பிறருக்கு நல்லது செய்வது, நல்ல எண்ணங்கள், கடவுளைப்பற்றிய தியானம் பக்தியோடு இவைகளை அனுஷ்டிக்கவேண்டும்.

பகவானிடம் அன்பு என்பது ஒன்றுயிருத்தலும் கீழ்க்கண்ட தன்மைகளையுடையது:- நற்குணம், மஹிமை இவைகளை விரும்புவது, கடவுளை துதிப்பது, நினைப்பது, வேலைக்காரன், சிநேகிதன், காதலன், பெற்றோர்கள் இவைகள் போலும் ஆசை கொள்வது, தன்னை அர்ப்பணம் செய்வது. தியானத்திலேயே மூழ்கியிருப்பது. பக்தி சுத்தமான தன்னலமற்ற அன்பாகும். அது கடவுளை தன் உள்ளத்திலும் எல்லாவிடத்திலும் பார்ப்பதற்குள்ள வழியை தேடுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்ம சாஸ்திரம்

— பொய்யாமொழி —

பல்லக்கில் வருகிறவன், யானை மீது வருகிறவன், 90 வயதுக்கு மேற்பட்டவன், வியாதிஸ்தன், தலைச்சுமையுடன் இருப்பவன், பெண்கள், அனுஷ்டானம் தவருமல் செய்யும் பிராமணன், அரசன், திருமண மாப்பிள்ளை ஆகியவர் எதிரில் வந்தால் ஒதுங்கியிருந்தும் பின்னுக்கு வந்தால் முன்னுக்குச் செல்ல வழி விட்டுகொடுக்க வேண்டும். யார் தர்மத்தையும் வேதாந்தங்களையும் சர்வசாஸ்திரங்களையும் கற்றபின் பிறருக்கு சொல்லிக்கொடுக்கிருர்களோ அவர்களே ஆசாரியர் எனப்படுவர்.

யார் வேதம், சாஸ்திரம், தர்மம் இவைகளைச் சொல்லிக் கொடுக்கிருர்களோ அவர்களே உபாத்தியாயர் எனப்படுவர். உபாத்தியாயனைவிட ஆசாரியன் பத்து மடங்கு உயர்ந்தவன். ஆசாரியனைவிட நூறு மடங்கு தகப்பன் உயர்ந்தவன். தகப்பனைவிட ஆயிரம் மடங்கு தாயார் உயர்ந்தவள். சாஸ்திரம், தர்மம், வேதாந்தம் ஆகியவைகளை எவன் கொஞ்சமாவது படித்து அதன் கருத்தைக் கூறுகிருனே அவனைக் குருவாக ஏற்றுக்கொள்ளலாம்.

சோதிட வைத்திய சாஸ்திரங்களை எவன் கற்று அதன்படி பிறருக்கு நன்மை செய்கிருனே அவன் தன் வயதுக்கு சிறியவராக இருந்தாலும் வணங்கத் தக்கவர்கள். வயது, நகை, பணம், பங்களா, வாகனம் ஆகியவைகளை வைத்துக் கொண்டிருப்பவன் பெரியவனுக மாட்டான். அவன் கொஞ்சமாவது தர்மத்தை அறிந்து இருந்தால் மட்டுமே பெரிய மனிதனுகப் போற்றத் தக்கவன். சிறுவனுக இருந்தாலும் வேத தர்மம், தர்க்க சாஸ்திரங்கள் அறிந்திருந்தால் போற்றத்தக்கவனுவான். ஒருவன் பல துன்பங்களை அனுபவித்திருந்தாலும் பிறரைப் பார்த்து துன்பம் வரும்படி பேசக்கூடாது. மரத்திஞல் செய்த யானை, தோலில் செய்த மிருகம், அட்டையில் செய்த கத்தி, காகிதத்தில் செய்த புஷ்பம், கொஞ்சமாவது தானம், தர்மம் செய்யாதவன், வேதம் ஓதாத பிராமணன் ஆகிய இவ்வைந்தும் உபயோகம் இல்லாத சரக்குகள், பார்வைக்கு மட்டும் உபயோகப்படுபவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடனிடம் புத்தகமும், பெண்ணிடம் பேடியும், கஞ்சனிடம் பொருளும், ஊமையிடம் இரகசியமும் இருந்தால் எப்படி உபயோகப்படாதோ அதேபோல் வேதமில்லாத பிராமணன் உபயோகப்படாதவன் என்று சாஸ்திரத்தில் கூறியிருப்பதால் கொஞ்சமாவது வேதங் கற்றுக்கொள்ள வேண்டும். எவன் ஒருவன் நாள் தோறும் தன் சக்திக்குத் தகுந்தபடி கிடைக்கும் நேரத்தில் சாஸ்திரத்திலோ, கீதையிலோ உள்ள நாலு வாக்கியங்களைப் படிக்கிருனே அவன் தவம் செய்ததாகவே கருதப் படுகிறன். இவனுக்கு எந்தக் கஷ்டம் வந்தாலும் அது சுலபமாக நிவர்த்தியாகும்.

திருமணம் ஆகாத பிரமசாரிகள் தேன், மாமிசம், சந்தனம், புஷ்பம், வாசனைத்திரவியங்கள், கூத்து, சூதாட்டம், குடி, வம்பளத்தல், பழி சொல்லுதல், பொய் சொல்லுதல், அகாலத்தில் வீதியில் திரிதல், மாதர்களை விருப்பத்தோடு பார்த்தல், அவர்களை பின் தொடரல் ஆகியவைகளை நீக்க வேண்டும். இவற்றை எந்த பிரமச்சாரி நீக்குகிருனே அவன் எதிர்காலத்தில் புகழுடன் வாழ்வான் என்பது உறுதி.

திருமணம் ஆகாத பிரமச்சாரி எப்போதும் தனியாகப் படுக்கவேண்டும். நித்திரையிலிருந்து சூரியன் உதிக்கும் முன்பே எழுந்திருக்க வேண்டும். உதித்தபின்பு நித்திரை செய்தலாகாது. சூரிய அஸ்தமன காலத்திலும் நித்திரை செய்யக்கூடாது. சூரிய உதயத்திற்கு முன்பு படிப்பதினுல் இவர்கள் அறிவு விருத்தி ஆகும். மாதர்களின் நடை, உடை, பாவனை, உபசாரமிவைகளே மனிதர்களின் சிருங்கார சேஷ்டைக்குக் காரணமாக இருப்பதால் இவைகளில் மாதர்கள் சாதாரணமாக இருக்கவேண்டும். மூடனுக இருப்பவன்கூட காமத்திற்கு விதிவிலக்கல்ல என்று சாஸ்திரம் கூறியிருப்பதால் பெண்கள் காரணமின்றி தன்னை அழகுபடுத்திக்கொள்ளக் கூடாது.

ஒருவனுக்கு அறிவைக் கற்பிப்பவன் பரமாத்மாவாகவும், தன் சிருஷ்டிக்குக் காரணமானதந்தை பிரமாவுக்கும் தன்னை பத்துமாதம் சுமந்து கஷ்டப்பட்ட தாய் பூமிதேவியாகவும் உடன் பிறந்த சகோதரன் ஆத்மாவின் உருவமாகவும் எண்ணிப் போற்றத்தக்கவர்கள். இவர்கள் எது சொன்னுலும் எதிர்த்துப்பேசாமல் கேட்டு அதின்படி நடக்க வேண்டும். மாதா பிதாக்கள் பிள்ளைபெறுகின்ற விஷயத்தில் பிரசவ வேதனை தொடங்குவதில் இருந்து வித்தையும் அறிவும் கற்பிக்கிறவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு கஷ்டப்படுகிருர்களோ அதற்கு ஈடாக நாம் எத்துணைஜன்மம் எடுத்து அவர்களுக்கு உதவி செய்தாலும் காணுது. அதனுல் பெற்ரேர்களை ஆயுள்வரை அவமரியாதை செய்யாமல் காப்பாற்றும் பொறுப்பு பிள்ளைகளைச் சேர்ந்தது.

தாய், தந்தை, குரு இவர்களின் கஷ்டத்தை அறிந்து அதைப் போக்கிறவன் தவம் செய்த பயனை அடைகிறுன். மூவரும் மும்மூர்த்திகளாகவும், முப்பெருந் தேவர்களாகவும் போற்றத்தகுந்தவர்களாவர். தாயிடம் பக்தி செலுத்துவதால் இம்மையில் சுகத்தையும், தந்தையிடம் பக்தி செலுத்துவதால் மறுமையில் சுவர்க்கத்தையும், குருவிடம் பக்தி செலுத்துவதால் முடிவில் பிரமலோக விதியையும் அடைகிருர்கள். அமிர்தம்விஷத்திலிருந்தாலும்,உயர்ந்த சாஸ்திர விஷயபுத்தகங்கள் மூடனிடமிருந்தாலும், நல்லொழுக்கம் சத்துருவிடமிருந்தாலும், சொர்ணம் நரகலில் இருந்தாலும் எடுத்துக் கொள்வதில் தவறுஇல்லை. பூமி, சுவர்ணம், பசு, குதிரை, பாதரட்சை குடை, ஆசனம், வஸ்திரம், தானியம் ஆகிய இவைகளைத் தனக்குக் கல்வி கற்பித்த குருவுக்கு கொடுப்பதால் தான் கற்ற அறிவு மேன்மை அடைகிறது என்பதோடு குருவின் பரிபூரண கடாட்சம் கிடைத்து பெயரும் புகழும் ஒருவனுக்கு ஏற்படுகிறது.

கல்வி, தர்மம், ஆசாரம், சாஸ்திரம், பக்தி ஆகியவைகள் எந்த இடத்தில் இருந்தாலும் அறிந்து கொள்ளலாம். இவற்றை அறிந்து கொள்வதற்கு ஜாதி மதம் குறுக்கே நிற்காது. வாசனை உள்ள இடத்தில் மகாலட்சுமி வாசம் செய்கிருள். மகாலக்குமி இருக்குமிடம் வாசனை உள்ள இடமாக இருக்கும். வாசனை உள்ள இடத்தில்தான் வசதி பெருகும். அதனுல் ஒருவன் தன் வீட்டில் தினசரியோ, அல்லது வெள்ளிக்கிழமைகளிலோ ஒரு பத்தியாவது காண்பித்து தெய்வத்தைப் பிரார்த்திக்க வேண்டும்.

எந்த வீட்டில் பெண்கள் கண்ணீர் சிந்தாமல் சந்தோஷமாக இருக்கிருர்களோ அந்த இடத்தில் எல்லாத் தெய்வங்களும் இருக்கின்றன. பெண்களும் அழக்கூடாது: பெண்களை அழவைக்கவும் கூடாது என்பதில் குடும்பஸ்தன் அக்கறை கொள்ள வேண்டும். ஒரு பெண்ணுக்குத் திருமணம் முடிந்ததும் தன் பொறுப்பு கழிந்து விட்டது என்று அப்பெண்ணின் தந்தையும் சகோதரனும் எண்ணக்கூடாது. அப்பெண்ணின் திருமணத்திற்குப் பின்பு அவள் வீட்டிற்கு வரும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை எல்லாம் உபசரிக்கவில்லை என்று தெரிந்து அப்பெண் ஏங்கினுல் அவள் தகப்பனின் குடும்பம் சூனியம் வைத்தது போல் சிதைந்து போகும் என்று கூறியிருப்பதால் தன்னுல் முடிந்த உதவி பெண்ணுக்கு செய்ய வேண்டும்.

ஒரு மனைவியானவள் தன் அழகால் கர்வம் கொண்டு தனது புருஷனை மதியாமல் பிற ஆடவருடன் சேர்ந்தால் அவள் செய்த பாவத்திற்கு விமோசனமே இல்லை. மனைவி அதிக அழகுள்ளவளாக இருந்தாலும் ஆபத்து. அதிக அழகு இல்லாதவளாகஇருந்தாலும்ஆபத்து ஆகும். ஒருவன் தனக்குச்செய்யப்படும் மரியாதையை விஷத்தைப்போல நினைத்துப் பயப்பட வேண்டும். அவமானத்தை அமிர்தமாக நினைத்து விரும்ப வேண்டும். நாத்திக வாதம் புரிபவர்களுடன் விவாதம் செய்யக் கூடாது. மாதர்களுடனே, தாய், தங்கை வயது வந்த பெண் இவர்களுடன் ஒருவன் தனியாக உட்கார்ந்து பேசும் போது நல்ல விஷயங்களையே பேசவேண்டும். க்ஷேமத்தை எப்பொழுதும் விரும்புகிறவன், தான் செய்யும் ஒவ்வொரு சுபகாரியங்களுக்கும், தெய்வ காரியங்களுக்கும், விரத சடங்குகளுக்கும், மதகாரியங்களுக்கும், தன் பெண், உடன் பிறந்த சகோதரி ஆகியவர்களுக்கு ஆடை, ஆபரணம் பொருள் முதலியன கொடுத்து உபசரிக்க வேண்டும். வசதி இல்லாதவன் தன் சக்திக்குத் தகுந்தபடி உபசரிக்க வேண்டும். குடும்பத்தில் திருமணம் போன்ற காரியங்கள் நடக்கும் போது சுமங்கலிகள் வருத்தம் அடையும்படி தலைவன் நடந்து கொள்ளக்கூடாது.

---


# ஆத்மஜோதி நிலைய
## வெளியீடுகள்

நிழலின் பின்னே மனிதன் விலை ரூபா 10-00
அர்ச்சனை மாலை ரூபா 5-00

வியாபாரிகளுக்கு 20 வீதம் கழிவு உண்டு.

கிடைக்குமிடம்

ஆத்மஜோதி நிலையம் - நாவலப்பிட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் வடிவக்காட்சி

— செல்வி. க. கமலகுமாரி —

முச்சுடர்களும் ஒளி கொடுத்து மூவாத பேரொளியாய், பெருவெளியாய், பெருவிரிவாய் விளங்கிய அருட்சக்தியாம் அன்னை நீல நிறத்து நேரிழையாய்க் காட்சியளித்தாள். பொன் போன்று பாரெலாம் பரந்து விரிந்து விளங்கினாள். அகிலமெலாம் ஈன்றுளாயினும் கட்டிளம் மாறாக் கன்னியாய் அருளாளர்க்கெல்லாம் அமுத சுரபியாய் திகழ்ந்தாள்; ஞான சம்பந்தமுற்ற எவர்க்குமே பொன் முகலியூற்றமுதம் ஊட்டும் அந்தப் பூரண சக்தி.

அப்பூரண சக்தியானவள் நான்கு திருக்கரங்கள் உடையவளாக இரு அபய கரங்களில் தாமரையும் குமுதமும் விளங்க வரத கரங்கள் இரண்டிலும் தளிர்போன்ற மென் விரல்கள் விளங்க நின்றாள். ஞானதாகமுற்று அழும் தனது குழந்தைகளுக்காக அருளமுதப் பால் சொரிந்து கொண்டிருக்கும் மார் பகங்களின் மேல் பொன்னும், மணியும், முத்தும் நிறை நல்லாடைகள் மின்னிப் பொலிந்து கொண்டிருந்தது. மாணிக்கம் பதித்த திருமுடியும், அம்பொற் சிலம்பணிந்த திருவடியுமாய் காட்சி கொடுத்தாள். மாணிக்க வல்லியின் பாத கமலங்களைக் கண்ட அவர் உள்ளமும் உடலும் கொள்ளை ஆனந்தத்தால் செயலிழந்து விட்டன.

அன்னையின் இன்னுமொரு வடிவக் காட்சியானது இப்படியாக அமைந்திருந்தது. அருட்சுடர் விரிந்த செந்தமிழ் மண்டலத்தே அமர்ந்திருந்த அவள் ஐம்பத்தொரு சக்திகளாக விரிவடைந்திருந்தாள். ஐம்பத்தொரு சக்திகள் புடைசூழ ஐம்பத்தொருவரையும் தன்னுணையின் கீழ்க் கொண்டு அவர்கள் நடுவே நாயகியாக வீற்றிருந்தாள்.

அருளன்னையின் அடியொரு முடியும் ஜோதியாக மின்னின. அழகிய திருமேனி முத்து நிறத்தில் ஒளிர தாங்கிய கைகளில் பளிங்கு மணிமாலையும்; பைங்கிளியும்; ஞான அனலும் ஏந்திய கையில் பாசக் கயிற்றினையும் பற்றியிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவன்னையை நினைந்து நினைந்து அவள் திருவடிவை அகக்கண்ணுல் நோக்கி நோக்கி மனமானது சுகமிசை நாடாது அவள் பின்னே ஓடி ஓடிப் பின் ஓடாது நிலைத்து நின்று ஓராண்டு ஒளிபெற்றுத் திகழ்ந்தது. ஆசை ஆணவ வினைகள் அடியோடழிய அருள் ஞானக்கதிர் எழுந்தொளி விட்டது. பற்றின் மூலம் பறித்தெறியப்பட்டது. அன்னையின் ஆன்ம நேயத்தில் பின்னும் ஐந்தாண்டு திளைத்திருந்தாள். நாபிக்குண்டலினி மேலெழுந்தோடியது. பிறப்பறுக்கவல்ல பேரொலி வலி மிக்கொலித்தது. அஃது இதயத்தை ஊடுருவி மேலேறி சங்கார கால ருத்திரனின் டமரக ஓசையைப் பரப்பி அனுகதத் தொனியை முழங்கியது.

அன்னையின் திருவடிக் காட்சியில் வேருெரு தோற்றம் கண்டார் அவர். நாவின் முதல்வியான இறைவி மணிமாலை யணிந்து பொன்முடியும் பொன்னிற ஆடையுமாய்க் காட்சி தந்தாள். அவள் அழகுத் திருமேனி பால் வண்ணமாய் பொலிந்தது. சிருஷ்டி தொடக்க காலத்து நிலையில் ஒரு கையில் சின் முத்திரையும் மற்றொரு கையில் ஞானச் சுவடியும் இன்னு மொருகையில் ஒளிவீசும் வெள்ளிய கமண்டலமும் மற்றுமொரு கையில் படிக மணி மாலையும் பொலிய விளங்கி ஞள்.

அன்னையின் தெய்வீகக் காட்சியில் இன்னுமொன்று, அவள் எட்டுக் கரங்கள் உடையவளாக ஆறு கரங்களில் பாசக்கயிறு, மழு, வாள், கேடயம், வில், அம்பு எனும் படைக் கலங்களும், மற்றைய இரு கரங்களில் அஞ்சலிக் குறிப்பும் புகல்தரு குறிப்பும் காட்டி நின்ருள்.

இவ் வம்மை பொன் முடியும், முத்து மணி மாலையும், பவள மணி மாலையும், செம் பட்டுடையும் தரித்து மணிக்கச் சணிந்து அழகுற அமைந்து ஆருயிர்களை தழைப்பிக்கச் செய் யுமவள் பச்சை நிறத் திருமேனியளாய் பாங்குற விளங்கினுள். இப் பச்சைநிற பெருமாட்டியை பாங்கியர் நாற்பத்தெண்மர் சூழ்ந்திருந்தனர். இளங்குதலைத்தேன் மொழித் தோழியர் எண்மர் சூழ்ந்து வர நடுவண் திருவுலா வந்தாள் அத் திருத் தேவியானவள்.

மற்ருேர் நிலையில் தேவியானவள் பத்துத் திரு முகங்களு டன் காட்சியருளினுள். ஆதித்த மண்டலமொப்பதாக சக்தி தயங்கிவரும் சாதனைக் காலத்து உபாசனை புரிபவரின் இடர் களையும் ஒண் கரங்கள் இருபதுடன் தோன்றிய அவள் பாச வினை அறுக்க சூலத்தை வீசுபவளாகக் காணப்பட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவள் இருபது கரங்களில் முறையே சூலம், தண்டம், வாள், கனல், முரசம், ஞானமெனும் சின் முத்திரை, வேல், அம்பு, திகிரி (சக்கரம்) உடுக்கை, வில், கிளி, காலமறை, தாமரை, பாசம், மழு, கத்தி, ஏந்து கரம், சங்கு, குவிகரம் இப்படியாக காட்சி கொடுத்தன.

மற்றோர் நிலையில் சதாசிவ நாயகியானவள் கீழ்முக நோக்கினளாய் ஆன்ம உய்வு கருதி ஐந்து முகங்களும், பத்துத் திருக்கரங்களுமாக காட்சி கொடுத்தாள். பளிங்கு மணி மாலை, முத்தலைச் சூலம், பிரம்ம கபாலம், அமுத மொழிக் கிளி, பண்மணிப்பணாரம் (பாம்பு) மழு, கத்தி. பூம் பந்து, செம் மாணிக்கம், உடுக்கை என பத்துப் பொருட்களும் ஏந்திக் காட்சி கொடுத்தாள். பொன்னும், மணியும், பூணாரமும் புனைந்த பூசனைத் தவவுருவாக அம்பிகையைக் கண்டார் அவர்.

இன்னுமோர் நிலையில் அம்பிகையானவள் அமுதபயோதரியாக அநாவது அமுதகலசம் தாங்கிய ஈச்வரியாக விளங்கினுள். அவள் திருக் கழுத்து வெண்ணிறமும், திருக் கரங்கள் பொன்னிறமும் பெற்றுத் திகழ்ந்தன. அவளது அருட் கரத்தின் கண்ணே மட்பாத்திர கமண்டலம் விளங்கியது. அவள் தூய வெண்ணிறத்தவளாக அமுத வடிவான குமுதம் போன்ற குளிர்ந்த பருத்த வெண் முத்து மாலை திருக் கழுத்தினையும், அழகிய மார்பகங்களையும் அணி செய்ய விளங்கினுள்.

பிறிதோர் நிலையில் அருட் சக்தியானவள் பெண்மையின் தன்மையாம் தயவே வடிவாக விளங்கினுள். எவ்வுயிர்க்கும் தந்தையாம் செவ்விய சீர் சிவபிரான் அருட்கொடி தழுவ விளங்கும் தூணென அமைந்து நின்றுன். பெண்ணமுதமாகிய அன்னைக்கு திலகம் போன்று அழகு கோதையர் முப்பத்திருவர் சூழ பரந்து விரிந்த ஆயிரத்தெட்டிதழ் பங்கயத்தினுள்ளே எம் இறைவியாம் முழுமுதற் பூரணி கொலு வீற்றிருக்கக் கண்டார் நம் நாயனுர்.

திருமூலர் கண்ட அம்பிகை தரிசனம் யோக தத்துவத்தின்படி முதற் காட்சியில் பொது நிலைச் சக்தியாகவும், பின்னர் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞரு, ஆக்ஞையின் மேல் மதி மண்டலம், சகஸ்ராரம் ஆகிய ஆதார கமலங்களில் கண்ட தரிசனங்களே என்பதனை வாசகர்கள் அறிந்துகொள்வார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேற்று நாடுகளில் விநாயகப்பெருமான்

(புலவர்ஏறு ந. ரா. முருகவேள்–M.A., M.O.L., அவர்கள்)

இந்து மதத்திற்குரிய கடவுளர் பலருள் விநாயகப்பெருமான் மிகவும் சிறப்புடைய ஒருவராவர். "உள்ளபொருள் ஒன்றே; அதனை அறிஞர்கள் பலவாகக் கூறுகின்றனர்." (ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி) என வேதம் கூறுகின்றது. "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று மிலாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்று மணிவாசகர் பாடுவதுபோல, ஒரு கடவுளையே பக்தர்கள் பல பெயர்களும் வடிவங்களும் அமைத்து வழிபட்டு மகிழ்கின்றனர். அம் முறையில் அமைந்த கடவுளருள் விநாயகர் ஒருவர் இந்துக்கள் மட்டுமே அன்றி, பௌத்தர்கள், ஜைனர்களும் கூட, விநாயகப் பெருமானை விரும்பி போற்றி வழிபடுகின்றனர். வட இந்தியாவில் குப்தர்களின் காலத்திலும், அதற்குப் பின்னரும் விநாயகர் வழிபாடு பெரிதும் பரவியிருந்தது. இராஜஸ்தானில் ஜோத் பூருக்கு அருகே, கடியாலா என்னுமிடத்தில் உள்ள தூண் ஒன்றில் காணப்படும் கல்வெட்டு (கி.பி. 862) இவ்வுண்மைக்குச் சான்று பகருகின்றது. விநாயகரைப் பற்றிய மிகவும் பழமையான கல்வெட்டுச் சான்றாக இதுவே கருதப்படுகின்றது. இக்கல்வெட்டுத் தூணின் உச்சியில் நான்கு திசைகளையும் நோக்கும் வகையில் விநாயகரின் நான்கு திரு உருவங்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறே மேற்கிந்தியப் பகுதியில் வாதாபி என்னும் இடத்தில் உள்ள எலிபெண்டா எல்லோராக் குகைகளிலும், விநாயகர் திருஉருவங்கள் செதுக்கப்பட்டிருத்தலைக் காண்கின்றோம். மத்தியப் பிரதேசத்தில் அன்று மாவட்டத்தில் புர்மா என்னுமிடத்தில் உள்ள குப்தர் காலத்துக் கோயிலிலும், உதயகிரிமலைகளிலும் காணப்படும் விநாயகர் திருஉருவங்கள், மிகவும் சிறப்புடையனவாகக் குறிப்பிடத்தக்கனவாகும். கி.பி. 6 ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தவராக மிகிரர் தம்முடைய பிருகத் சம்கீதையில், விநாயகர் திரு உருவங்களைச் சிற்பங்களில் அமைக்கும் திறம் பற்றி நுணுக்கமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரித்துள்ளார். ஆதலால் அவருடைய காலத்திற்கும் முன்னரேயே விநாயகர் வழிபாடும் திருஉருவங்களும் இருந்திருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது.

## ஆப்கனிஸ்தானம்

குப்தர்களின் காலத்தில், சுமார் கி.பி. 45-ம் நூற்றாண்டுகளில் விநாயகர் வழிபாடு தொடங்கப்பெற்று, அஃது விரைவிலேயே பிற நாடுகளுக்கும் பரவலாயிற்று. பௌத்தர்கள் தமக்குரிய கடவுளர் குழுவில் விநாயகரையும் தழுவிக்கொண்டனர். அதனால் பௌத்த மதம் பரவிய நாடுகளில் எல்லாம் விநாயகர் வழிபாடும் பரவத்தொடங்கியது.

ஆப்கனிஸ்தானத்தில் அண்மையில் விநாயகரின் திரு உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கார்டெஸ் என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட விநாயகர் திருஉருவம் காபூலில் தர்க்காபீர் ரக்கந்நாத் என்னும் கோயிலில் வைத்து அங்குள்ள இந்துக்களால் பூசிக்கப்பட்டு வருகின்றது. அதன் பீடத்திலுள்ள பழைய கல்வெட்டு எழுத்துக்களில், அது கி.பி. 6 ஆம் நூற்றாண்டைச்சார்ந்தது என்று தெரிகின்றது. இந்தப் பெரிய அழகிய மகா விநாயகர் பரம பட்டாரக மகா ராஜாதி ராஜராகிய ஷாகி கிங்கலரால் மகா ஜியேட்ட மாசம் சுக்கில பட்சம், திரியோதசி, விசாக நட்சத்திரம் சிம்ம லக்கினம் கூடிய புனித நாளில் பிரதிட்டை செய்யப்பெற்றது என்று குறிக்கப்பெற்றுள்ளது. கல்ஹணர் இயற்றிய இராஜதரங்கிணியில் வரும் நரேந்திராதித்தியர் என்பவர் இந்த 'கிங்கிலர்' என்னும் மன்னராக இருத்தல் கூடுமோ என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றார்கள். சிற்ப அமைப்பின் முறையிலும்கூட, இத்திருஉருவம் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் இறுதியையும் 6 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தையும் சேர்ந்ததாக இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இந்த விநாயகர், கிரேக்கச் சாயல் பெற்று உறுதியான உடலமைப்புடன் 'ஆலீட" அமைப்பில் நின்ற நிலையில் நான்கு கைகளுடன், நாகயக்ஞோப வீதம் அணிந்து, மிக அழகுடன் விழங்குகின்றார். இடது தந்தம் ஒடிந்துள்ளது. கழுத்தில் ருத்திராக்கமாலை தரித்துள்ளார். அதன் சிற்ப அமைப்புக் கூறுகள், இது மகாராட்டிரத்தில் தோன்றியதனைக் குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே மற்றொரு பழமையான விநாயகர் திருஉருவமும், காபூலுக்கு வடக்கே பத்துக்கல் தொலைவிலுள்ள சாகர்தார் என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவரும் நின்றநிலையில் ஊர்த்துவமேத்திர அமைப்பில், நாகயக்ஞோபவீதம் அணிந்து ஏகதந்தராக, நான்கு கைகளுடன் அழகுறத் திகழ்கின்றார். இதன் சிற்ப அமைப்பு காந்தார நாட்டுப்பாணியை ஒத்திருக்கின்றது. இது குஷானர் காலத்திற்கும், குப்தர் காலத்திற்கும் இடைப்பட்டதாதல் வேண்டும். அதனால் இதனை விநாயகரின் மிகப் பழமையான உருவமாகக் கொள்ளலாம். காபூலில் ஷோர்பசார் என்னுமிடத்தில் நரசிங்கத்வாரா என்னும் கோயிலில் இன்றும் இத்திருவுருவம் இந்துக்களால் வழிபடப்பட்டு வருகின்றது. இந்நாளில் ஆப்கானிஸ்தானம் ஓர் இசுலாமியத் தனி நாடாக விளங்குகின்றபோதிலும் ஒருகாலத்தில் இது இந்தியாவின் ஒரு பகுதியாக (ஹரியானு) விளங்கி வந்ததுடன் வைஷ்ணவம், சைவம், பௌத்தம் என்னும் இந்திய நாட்டு மதங்களின் உறைவிடமாக நிலவி வந்தது. குஷான வம்சத்தைச் சேர்ந்த உஷிஷ்கனின் ஆட்சிக்குள் ஆப்கானிஸ்தானத்தின் கிழக்குப் பகுதிகள் அடங்கியிருந்தன. இதனால் இன்றும் இந்து மதக் கடவுளர் படிமங்கள் பல அங்கு கண்டெடுக்கப்படுகின்றன.

## நேபாளம்

இந்திய தேசத்தின் வடக்கு எல்லையிலுள்ள நேபாளநாட்டிலும் விநாயகர் வழிபாடு பரவியிருந்தது. அசோகச்சக்கரவர்த்தியின் புதல்வியாகிய சாருமதி என்பவள், நேபாளத்தில் விநாயகருக்கு ஒரு கோயில் கட்டினாள் என்று கூறப்படுகின்றது. கி.பி. 10ஆம் நூற்றாண்டில் விநாயகர் வழிபாடு அங்குப் பெரிதும் பரவி வளர்ந்திருந்தது. இந்துக்களும் பௌத்தர்களும் அவரை வணங்கினர். பௌத்தர்கள் "சித்திதாதா" (வெற்றி தருபவர்) எனக்கொண்டு விநாயகரை வணங்கி மகிழ்ந்தனர். புத்தர்பெருமான், இராஜக்கிருகம் என்னுமிடத்தில் தனது மாணவராகிய ஆனந்தர் என்பவருக்குக் 'கணபதிஹ்ருதயம்' என்னும் மந்திரத்தை உபதேசித்ததாக நேபாளநாட்டு ஐதிகம் கூறுகின்றது.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்திக்கும் தீந்தமிழ்! பக்திச்சுவை மிகுந்தது!

எத்திக்கும் திருவேற்காடு

## தேவி கருமாரி அம்மன் புகழ் பரப்பும்

திங்கள் ஏடு



# ஸ்ரீ தேவி

# கருமாரி அம்மன்

# விஜயம்

(மாத இதழ்)

ஆசிரியர்:

திருவேற்காடு அருட்கவியரசு

ஸ்ரீ தேவி கருமாரிதாசர் சுவாமிகள்

## பக்திக் கதைகள்—அருள் நெறி இலக்கியங்கள்

## வெண்பாப் பாட்டில்

## வேதம், புராணம், இதிகாசம், ராசிப்பலன்

## மற்றும் பல!

| | | | |
|---|---|---|---|
| இந்தியா: | தனிப்பிரதி | ரூ. | 2-00 |
| | ஆண்டுச் சந்தா | ரூ. | 24-00 |
| ஸ்ரீ லங்கா— மலேசியா— நாடுகளுக்கு | ஆண்டுச் சந்தா | ரூ. | 50-00 |

விபரங்களுக்கு:

**சூப்பர் பவர் பப்ளிகேசன்ஸ்**

152, முதல் மாடி-தம்புச்செட்டித் தெரு

சென்னை 600001.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered at the G. P. O. as a Newspaper M. L. 359/00.

# சந்தா நேயர்களுக்கு

திருவருளை முன்னிட்டு எல்லா நலன்களும்பெற்று வாழ் வீர்களாக! இச்சுடர் 35-வது ஆண்டுக்குரிய ஒன்பதாவது சுட ராகும். இவ்வாண்டுக்குரிய சந்தா 25/- ரூபாவையும் அனுப்பி வைப்பதோடு, பழைய நிலுவை இருப்பின் அவற்றையும் சேர்த்து அனுப்பிவைக்க வேண்டுகின்றோம். சந்தா இலக்கங் களையும் குறிப்பிட்டு எழுதினால் உடனே ரசீது அனுப்பி வைக்க வசதியாக இருக்கும். விலாச மாற்றங்களின் போது சந்தா இலக்கம், பழைய விலாசம், புதிய விலாசம் என்பன வற்றைத் தெளிவாக எழுதி அனுப்பிவையுங்கள். ஒரே பெய ரில் பல விலாசதாரர்கள் இருக்கிறார்கள். ஆகவே தெளிவுபெறு வதற்கு மேற்கூறியன அவசியம் தேவை. சிலர் தந்தியில் பணத்தை மாத்திரம் அனுப்பிவிடுகிறார்கள். வேறு எத்தகைய தகவலும் எம்மால் அறிந்துகொள்ள முடிவதில்லை. ஆகவே தந்தியில் சந்தா இலக்கத்தையும் பெயரையுமாவது குறிப் பிடுங்கள். ஆத்மஜோதி தொண்டு சிறப்புற நடைபெறு வதற்கு உங்கள் சந்தாவை உடனே அனுப்பிவைப்பதோடு ஒரு புதிய அங்கத்தவரையாவது சேர்த்து உதவுக.

ஆத்மஜோதி நிலையம். நா. முத்தையா
நாவலப்பிட்டி. (ஸ்ரீ லங்கா)

**இந்திய விலாசம்:**

S. RAJASEKARAN
'Visalakshi Illam', 274, Royapettah High Road,
Royapettah–Madras-600 014, Tamilnadu.
P. O. Box 5577, Telephone: 847107

**மலேசியா விலாசம்:**

S. SUBRAMANIYAM
Sri Eswari Flour Mill,
99-L, Jalan Tandok, Kualalumpur, Malaysia.

**சிங்கப்பூர் விலாசம்:**

Mrs. M. MAHESWARY THEVI
No. 3 - 3597 Geylang Bahru, Blk 54
Singapore 1233, Tel. 8955229

**இந்துனேசியா விலாசம்:**

SRI MARIYAMMAN KOVIL
Jalan Teuku Umar No: 18,
Medan-Sumatra, Indonesia.

ஆசிரியர் : நா. முத்தையா
அச்சுப்பதிவு : ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் – நாவலப்பிட்டி (ஸ்ரீ லங்கா)
அச்சிட்ட திகதி: 17-7-83

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org